# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my | Media_Selangor | SelangorTV selangortv.my | MediaSelangor

SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2055 / குரோதி வருடம் ஆனி மாதம் / ஜூன் 05/2024 / JUNE 05/2024





# பூச்சோங் காசல்பீல்டு தமிழ்ப்பள்ளிக்கு

## புதிய இடத்தில் அடிக்கல் நாட்டு விழா

**செலாயாங்-**

பூச்சோங் காசல்பீல்டு தமிழ்ப்பள்ளி அடிக்கல் நாட்டு விழாவை சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு அந்தோணி லோக் ஆகியோர் வளர்ச்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு தொடங்கி வைத்தனர்.

இதில் டிஜிட்டல் அமைச்சர் மாண்புமிகு கோபிந்த் சிங் டியோ , மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு வீ.பாப்பா ராய்டு, மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு இங் ஸீ ஹன், இத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஹோங் சென், கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு V. கணபதிராவ் உடன் ஜெனரல் டான் ஸ்ரீ டத்தோஸ்ரீ பங்லிமா முகமட் அசுமி பின் முகமது (ஓய்வு.) டாயா மாஜூ இன்ப்ராஸ்ட்ரக்சர் (டிஎம்ஐஏ), பிரசாரனா நிர்வாக மேலாளர்கள், பள்ளி உள்கட்டமைப்பு மேலாண்மை வாரியம் (எல்பிஎஸ்), பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கம் (பிஐபிஜி) ஆகியவற்றின் தலைவர்கள், உள்ளூர் அமைப்புகளின் தலைவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

அப்பள்ளியின் முன் ஒரு பகுதி நிலத்தைப் பிராசான நிறுவனம் எம்ஆர்டி எனப்படும் இலகு ரயில் பாதை கட்டுமானத்திற்கு கையகப் படுத்தியதால், பள்ளி நிர்வாகம் மாற்று நிலம் வேண்டிக் கோரிக்கையை முன் வைத்தது.

தான் ஸ்ரீ காலிட் தலைமையில் செயல் பட்ட அப்போதைய சிலாங்கூர் மாநில அரசு காசல் பீல்ட் தமிழ்ப் பள்ளிக்கு 2011ல் 6 ஏக்கர் நிலத்தை பூச்சோங் பண்டார் புத்திரியை ஒட்டிய பகுதியில் ஒதுக்கித் தந்தது, அதனுடன் பள்ளி கட்டுமான செலவுகளை பிரசான நிறுவனம் ஏற்கவும் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு மாற்றங்களை கண்ட அத்திட்டம் இப்பொழுது புதிய இடத்தில் அடிக்கல் நாட்டலுக்கான வேலைகளை பிரசானா மற்றும் போக்குவரத்து அமைச்சர் அந்தோணி லோக் மற்றும் மந்திரி புசார் அமிருடின் ஷாரி உதவியுடன் காசல்பீல்டு தமிழ்ப்பள்ளியின் புதிய வாரிய மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் மேற்கொண்டுள்ளது.

# மலேசியாவில் 940 கோடி வெள்ளியை முதலீடு செய்கிறது கூகுள்

**கோலாலம்பூர்-**

உலகின் தொழில்நுட்ப ஜாம்பவானான கூகுள் மலேசியாவில் 200 கோடி அமெரிக்க டாலரை (940 கோடி வெள்ளி) முதலீடு செய்யவுள்ளது. முதலாவது கூகுள் தரவு மையம் மற்றும் கிளவுட் எனப்படும் கூகுள் மேகக் கணினி மண்டலத்தை அமைப்பதும் அதில் அடங்கும்.

மேகக் கணினி சேவைக்கு உள்நாட்டிலும் உலகளாவிய அளவிலும் அதிகரித்து வரும் தேவை மற்றும் மாணவர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கான செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) கற்பித்தல் திட்டங்களுக்காக இந்த முதலீட்டை குகூள் செய்துள்ளது.

கூகுளின் முதலாவது மலேசிய தரவு மையம் மற்றும் கிளவுட் மண்டலம் அக்குழுமத்தின் மலேசியாவுக்கான மிகப்பெரிய முதலீடாகும். இதனை 13 ஆண்டுகளுக்கான இருப்பிடம் என்று கூகுள் பெருமையுடன் அழைக்கிறது என்ற அல்ஃபாபெட் இன்காப்ரேட்ட நிறுவனத்தின் தலைவராகவும் முதலீட்டு அதிகாரியாகவும் இருக்கும் கூகுளின் தலைமை நிதி அதிகாரி ரூத் போரெட் கூறினார்.

மிக உயரிய இணைய பாதுகாப்புத் தரம் உள்பட மலேசியாவின் 'கிளாவுட் முதலாவது கொள்கை'யை முன்னேக்கி கொண்டுச் செல்வதில் இந்த முதலீடு அந்நாட்டு அரசாங்கத்துடனான எங்களின் பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்துகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இன்றைய இந்த அறிவிப்பின் மூலம் மலேசியாவும் கூகுளும் இணைந்து புதுமைக்கு ஆதரவான சுற்றுச்சூழலை உருவாக்குவதிலும் இலக்கவியல் மாற்றத்திற்கான ஆற்றலை வளர்ப்பதிலும் கூட்டாகச் செயல்படுகின்றன என்று அவர் இன்று வெளிளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

இந்த முதலீடு 320 கோடி அமெரிக்க டாலர் (1,504 கோடி வெள்ளி) மதிப்பிலான நேர்மறையான பொருளாதார தாக்கத்திற்கும் எதிர்வரும் 2030ஆம் ஆண்டுவாக்கில் 26,500 வேலை வாய்ப்புகள் உருவாக்கம் காண்பதற்கும் வழி வகுக்கும் என கூகுள் கூறியது.

இங்கு நிறுவப்படும் தரவு மையம் மலேசியர்கள் உள்பட உலகம் முழுவதும் கோடிக்கணக்கானோர் தினமும் பயன்படுத்தும் சேர்ச், மேப்ஸ், வேர்க்பேஸ் உள்ளிட்ட பிரசித்தி பெற்ற இயங்கு தளங்களுக்கு மேலும் ஆற்றலை வழங்கும் என்றும் அது குறிப்பிட்டது.

# ஜூலை மாதத்திற்குள் பரம ஏழ்மையை ஒழிக்க மாநில அரசு இலக்கு



**ஷா ஆலம்-**

சிலாங்கூர் அரசின் ஆக்ககரமான வியூகத்தின் வழி மாநிலத்தில் பரம ஏழ்மையை எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் ஒழித்துவிட முடியும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி உறுதியாக நம்புகிறார்.

சிலாங்கூரில் 250க்கும் குறைவான குடும்பங்கள் பரம ஏழைகள் பிரிவில் இருப்பதை சமீபத்திய புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன என்று அமிருடின் கூறினார்.

சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டத்தில் இருந்து அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதாந்திர உதவியாக 300 வெள்ளி வரை உபரி நிதியை வழங்குமாறு மாநிலப் பொருளாதார திட்டமிடல் பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

மாநில அரசின் பல முன்னெடுப்புகளுடன் நாங்கள் செயல்படுத்திய வியூகங்களைப் பயன்படுத்தி மிக வறிய நிலையை எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் ஒழிக்க முடியும் என்று நம்புகிறோம் என்றார் அவர்.

இங்குள்ள சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா கட்டிடத்தில் நடைபெற்ற பிளாட்ஸ் கடனுதவித் திட்டத்தின் தொடக்க நிகழ்வில் அவர் இவ்வாறு கூறினார்.

எனினும், கடும் வறுமையை ஒழிப்பதற்கான இலக்கை அடைந்த பிறகு ஏழ்மையை ஒழிப்பதற்கான மாநில அரசாங்கத்தின் முயற்சி முற்றுப் பெற்று விடாது. இது ஒரு தொடர் நடவடிக்கையாகவே இருந்து வரும் என அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜூலைக்குள் ஏழ்மை நிலையை ஒழிப்பதோடு நாம் திருப்தி அடைந்து விட்டதாகப் பொருள்படுமா என்றால், நிச்சயமாக இல்லை. வறுமை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது என்று அர்த்தமில்லை. ஏனெனில் மக்கள் அவ்வப்போது இந்த பிரிவில் சேரலாம், வெளியேறலாம். ஆகவே தேவைப்படும் குடும்பங்களை கண்டறிந்து அவர்களுக்குத் தொடர்ந்து உதவுவோம் என்றார் அவர்.

ஜூலை மாதத்திற்குள் கடும் வறுமையை ஒழிப்பதை சிலாங்கூர் இலக்காகக் கொண்டுள்ளதாகவும் அப்பிரிவில் 861 குடும்பங்கள் உள்ளன என்றும் அமிருடின் கடந்த மே 1 ஆம் தேதி கூறியிருந்தார்.

# நவீன மின் சுடலைக்கான 25 ஆண்டு கால நகர்வு

## வெற்றியை நோக்கி– ஆலயம்




**கோல குபு பாரு-**

சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் கோல குபு பாரு இந்து சுடுகாட்டை , கோல குபு பாரு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் நிர்வகித்து வருகிறது. இந்த இடு காட்டில் நவீன மின் சுடலை அமைக்க வேண்டும் என்று ஆலய நிர்வாகம் 25 ஆண்டுகளாக போராடி வருகிறது. இந்த பிரச்னைக்கு கோல குபு பாரு இடைத்தேர்தல் நல்ல தீர்வை தரும் என எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் கெட்டதிலும் நல்லது நடந்திருப்பதற்கு இங்கு வாழ் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

### இறந்தும் மக்களுக்கு நன்மை அளித்தார்

கோல குபு பாரு சட்டமன்ற உறுப்பினர் மறைவு எவரும் எதிர்பார்க்காதது, யாரும் விரும்பாதது, ஆனால் அவர் இறந்தும் அங்குள்ள மக்களின் நீண்ட கால குறைகளுக்கு விடிவை கொண்டு வந்திருப்பதற்கு இங்குள்ள மக்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கிறோம் என்று ஆலய செயலாளர் ஆனந்தா தெரிவித்தார்.

இங்குள்ள இந்து சுடுகாட்டில் சடலம் எரிப்பது பெரும் சவாலாக இருந்து வந்தது. இந்து சுடலையில் பாரம்பரிய முறையில் தகனம் செய்யப்பட்டு வந்தது. ஆலய நிர்வாகம் 2000 ஆண்டு வாக்கில் நவீன மின் சுடலை அமைக்க முயற்சி மேற் கொண்டாலும் பெரும் பண சுமையை கருத்தில் கொண்டு மின்சுடலை அமைப்பதை தற்காலிகமாக ஒத்தி வைத்திருந்தது. இறுதியில் இந்த கோல குபு பாரு இடைத் தேர்தலின் வழி இதற்கு ஒரு விடிவு கிடைத்துள்ளது.

விரிவான செய்திக்கு பக்கம் 12

# வீடு கொள்முதல், சீரமைப்பு கடனுக்கு – பி.கே.என்.எஸ் மேபேங் ஒப்பந்தம்

**ஷா ஆலம்-**

சிலாங்கூர் மாநில மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து (பி.கே.என்.எஸ்.) வீடு வாங்குவோர் கொள்முதல் மற்றும் சீரமைப்புக்கு கடன் பெறுவதை எளிதாக்க மாநில அரசின் அந்த துணை நிறுவனம் மேபேங்க் வங்கியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக கொள்முதல் செய்யும் வீட்டிற்கு 90 விழுக்காடு வரை கடன் பெறவும் மைடெக்கோ எனும் புனரமைப்பு மற்றும் அழகுப்படுத்தும் பணிகளுக்காக கூடுதலாக 30 விழுக்காடு அல்லது கூடுதல் பட்சம் 250,000 வெள்ளி பெறுவதற்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது என்று பி.கே.என்.எஸ். குழுமத்தின் தலைமைச் செயல்முறை அதிகாரி டத்தோ முகமது அப்பாஸ் கூறினார்.

போதுமான அளவு நிதிக் கையிருப்பு இல்லாத காரணத்தால் புதிதாக வீடு வாங்குவோரில் பலர் தங்கள் வீடுகளை அழகுப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குவதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

நடப்பு பொருளாதாரச் சூழலில் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளதால் வீடுகளை சீரமைப்பு செய்வது கடினமானதாக உள்ளது. தாங்கள் விரும்பிய விதத்தில் அழகுப்படுத்தப்பட்ட வீடுகளை சொந்தமாக பெறுவதற்குரிய வாய்ப்பினை வீடு வாங்குவோருக்கு வழங்கும் நோக்கில் இந்த திட்டத்தை அமல்படுத்தியுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.




அதே சமயம், வீடுகளின் கூரையில் சோலார் எனப்படும் சூரிய ஒளியீர்ப்பு தகடுகளைப் பொருத்தும் வாய்ப்பும் துணை நிறுவனத்தின் வாயிலாக வழங்கப்படுகிறது என்று அவர் சொன்னார்.

முன்னதாக அவர், மைடெக்கோ நிறுவனத்திற்கும் மேபேங்க் வங்கிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் சடங்கை பார்வையிட்டார்.

இதனிடையே, இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக மைடெக்கோவுக்கு வழங்கப்படும் கூடுதல் தொகை உள்பட 120 விழுக்காடு வரையிலான கடனுதவியை வீடு வாங்குவோர் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்று மேபேங்க் குழுமத்தின் சமூக நிதிச் சேவைப் பிரிவுத் தலைமைச் செயல்முறை அதிகாரி சைட் அகமது தாவுபிக் கூறினார்.

## எஸ்பிஎம்– சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

**ஷா ஆலம்-**
கோலா குபு பாரு தொகுதியில் எஸ்பிஎம் தேர்வில் (2023) சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படவுள்ளது.

தேர்வில் குறைந்தபட்சம் 5A பெற்ற மாணவர்களுக்கு ஜூன் 20 வரை இதற்கான விண்ணப்பங்கள் திறக்கப்படும் என்று சட்டமன்ற உறுப்பினர் பாங் சோக் தாவ் கூறினார்.

மேலும், RM100 (5A), RM150 (6A), RM200 (7A), RM250 (8A), RM300 (9A) மற்றும் 10A மற்றும் அதற்கு மேல் RM350 வழங்கப்படும் என அவர் கூறினார்.

தகுதியுடைய மாணவர்கள் https://docs.googlecomforms/d/e/1FAIpQLScdxk-79e9Dgzt6NuE3IYpQ7UgW-JDGCO-YbBeBNait6aa-FOw/viewform?usp=sf_link என்ற இணைப்பில் பதிவு செய்து, பிறப்புச் சான்றிதழ் மற்றும் 2023 தேர்ச்சி முடிவின் சான்றிதழ் ஆகியவற்றை பதிவேற்றம் செய்யலாம் என்று அவர் கூறினார்.

மொத்தம் 11,713 எஸ்பிஎம் 2023 விண்ணப்பதாரர்கள் அனைத்து பாடங்களிலும் A+, A மற்றும் A- தேர்ச்சியைப் பெற்றுள்ளனர்.

முந்தைய ஆண்டு 4.74 ஆக இருந்த தேசிய சராசரி தரம் (GPN) இவ்வாண்டு 4.60 ஆகப் பதிவு செய்துள்ள நிலையில் மாணவர்களின் சாதனை சிறப்பாக உள்ளது.

# ‘காலி’ இடங்களை நிரப்புவது மட்டுமல்ல

## பெண்களின் பங்கும் மிக முக்கியமானதாகும்



**ஷா ஆலம்-**
பெண்கள் அதிகாரமளித்தல் என்பது மாநிலத்தின் முக்கியமான நிகழ்ச்சி நிரலாக இருந்து வருகிறது, மேலும் அவர்களை முன்னேற்றுவதற்கு பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டு முதல், சிலாங்கூர் பொருளாதார மற்றும் சமூக சவால்களை எதிர்கொள்வதில் அவர்கள் பின்தங்கி விடக்கூடாது என்பதற்காக பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் கொள்கையை செயல்படுத்தி வருவதாக டத்தோ மந்திரி புசார் கூறினார்.

“பெண்களின் பங்கு வெற்று இடங்களை நிரப்புவது மட்டுமல்ல, அவர்கள் நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். 2017 முதல், பாலின சமத்துவத்தை உருவாக்க பெண்களை ஆட்சியில் அமர்த்தினோம்.

மேலும் பெண் தலைவர்களை உருவாக்க சிலாங்கூர் மகளிர் தலைமைத்துவ அகாடமியை (AKW) உருவாக்கியது. சிலாங்கூர் ஒரு அழகான கொள்கையை உருவாக்குவது மட்டும் அல்ல, ஆனால் பெண்களின் செயல்பாடுகளும் பணிகளும் தொடர்ந்து தொடர்புடையதாக இருப்பதை உறுதி செய்கிறது” என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

“வளமான பெண்கள், சிலாங்கூர் மக்மூர்” என்ற கருப்பொருளான சிலாங்கூர் பெண்கள் கொள்கை மற்றும் செயல் திட்டம் 2024-2026 இன் வெளியீட்டு விழாவில் அவர் பேசினார்.

நிர்வாகத்தில் பெண்களுக்கான 30 சதவீத இடஒதுக்கீட்டை மாநில நிர்வாகமும் கட்டுப்படுத்தவில்லை என்று அமிருடின் கூறினார்.

“இது ஒரு இறுதி எண்ணிக்கை அல்ல, ஆனால் ஒரு அளவுகோல். மேலும் நிரப்ப வாய்ப்பு இருந்தால் என்ன தவறு. பொருத்தமாக, இந்த எண்ணிக்கை தரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப் பட்டுள்ளது. பெட்டாலிங் ஜெயா, கோம்பாக் மாவட்ட அதிகாரிகளும், அம்பாங் ஜெயா நகரசபையின் தலைவரும் பெண்கள்.

“இந்த எண்ணிக்கை அடையப்பட வேண்டியதல்ல, ஆனால் வழிகாட்டுதல்கள் மற்றும் இலக்குகள் அடையப்படுவதற்கு வழங்கப்படும் தரத்தைப் பார்க்க வேண்டும்,” என்று அவர் கூறினார்.



## மூல நீர் உத்தரவாதத் திட்டம்

## ஆகஸ்ட் மாதம் செயல்படத் தொடங்கும்

**கிள்ளான்-**
சிலாங்கூர் மூல நீர் உத்தரவாதத் திட்டம் (எஸ்.ஜே.ஏ.எம்.) கால தாமதத்திற்கு பிறகு இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்திற்குள் செயல்படத் தொடங்கும் என்று அடிப்படை வசதி மற்றும் விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹாஷிம் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்பு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் முடிக்கத் தவறிய மென்தா சென். பெர்ஹாட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தின் ஏ பிரிவுப் பணிகள் தற்போது சிறப்பாக நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சுங்கை கிள்ளானில் ஆற்றை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள இன்டர்செப்டர் 002 கப்பலின் செயல்பாடுகள் தொடர்பாக அஃப்பின் குழுமம் மற்றும் லண்டாசன் லுமாயான் சென். பெர்ஹாட் இடையேயான ஏற்பாட்டு ஆதரவு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினார்.

இத்திட்டம் சிறப்பான முறையில் மேம்பாடு கண்டு வருவதாகக் கூறிய அவர், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடையும் வகையில் அதன் பணிகள் அமைந்துள்ளது என்றார்.

இத்திட்டத்திற்கான காலக்கெடுவை டிசம்பர் வரை நீட்டிக்க மென்தா சென் பெர்ஹாட் நிறுவனம் கோரிக்கை விடுத்ததாகக் கூறப்படும் செய்திகள் தொடர்பில் அவர் இவ்வாறு கருத்துரைத்தார்.

பொது குத்தகைத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறிய நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு நீர் மேலாண்மை, விவசாயம், உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பான சிலாங்கூர் சிறப்பு தேர்வுக் குழு (இன்ஃப்ராக்ரோ) மாநில அரசாங்கத்தை கடந்த மார்ச் மாதம் வலியுறுத்தியிருந்தது .

## சிலாங்கூர் பொருளாதார வளர்ச்சி திட்டம் RS1

**ஷா ஆலம்-**
மலேசியாவின் 4.2 சதவீத பொருளாதார வளர்ச்சி, 2024 முதல் காலாண்டில் கணிக்கப்பட்ட 3.9 சதவீத மதிப்பீட்டைத் தாண்டியது.

மடாணி பொருளாதார கட்டமைப்பின் கீழ் பொருளாதார வளர்ச்சியும் முதலீடும் முதல் சிலாங்கூர் திட்டத்தின் (RS-1) மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை (ஜிடிபி) 6.5 முதல் ஏழு சதவீதம் வரை அடையும் நோக்கத்துடன் ஒத்துப்போகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

“நாட்டின் பொருளாதார செயல்திறன் சிலாங்கூர் மலேசியாவின் GDP பங்களிப்பை 2025க்குள் 30 சதவீதம் அதிகரிக்க உதவுகிறது.

இதற்கிடையில், இலக்கு வைக்கப்பட்ட எரிபொருள் மானியங்களை நடைமுறைப் படுத்துவது, ஆண்டுக்கு 4 பில்லியன் ரிங்கிட் வரை சேமிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் சிலாங்கூரின் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக நிதியை அனுப்ப முடியும் என்று அமிருடின் கூறினார்.

“டீசல் மானியங்கள் மற்றும் கோழியின் சுதந்திர விலை நிர்ணயிப்பு (மிதக்கும் விலையை) சரிசெய்வது, இல் திசம் சிலாங்கூர் பென்யாயாங் (ISP), மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களின் கீழ் நலத்திட்டங்களைச் செயல்படுத்த மாநில அரசாங்கத்திற்கு இடமளிக்கிறது.

“கூடுதலாக, Khazanah Nasional வழங்கும் RM1 பில்லியன் நிதி ஆதரவு, RS-1ன் இலக்குகளின்படி, தொழில் முனைவோர் வாழ்க்கை அறிவியல், வேளாண் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி ஆகியவற்றில் தங்கள் வணிகங்களை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளைத் திறக்கிறது,” என்று அவர் கூறினார்.

2024 முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதார சாதனைகள் காரணமாக சிலாங்கூருக்கு பிற நன்மைகள்:

சும்பங்கன் துனாய் ரஹ்மா (STR) மற்றும் சும்பங்கன் அசாஸ் ரஹ்மா (SAR) நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடுகள், இது மாநிலத்தில் ஒப்பீட்டு வறுமையைக் குறைக்கிறது.

RS-1 இன் குறைந்த கார்பன் முன்முயற்சிகளை ஆதரிக்கும் தேசிய ஆற்றல் மாற்றம் திட்டம் (NETR) மூலம் ஆற்றல் துறையை மேம்படுத்துதல்.

இலக்கு மானியங்கள் நீர் மேலாண்மை செலவுகளை மிச்சப்படுத்துகிறது மற்றும் சுங்கை கிள்ளான் சுத்தம் செய்வது போன்ற முக்கியமான திட்டங்களை செயல்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

மலேசியாவின் செயற்கை நுண்ணறிவு பீடத்தின் (AI) ஸ்தாபனம் சிலாங்கூர் இளைஞர்களின் திறன் மற்றும் வருமானத்தை பயிற்சி மற்றும் கல்வி மூலம் மேம்படுத்துகிறது.

பொது நிதி மற்றும் நிதிப் பொறுப்புச் சட்டம் 2023 மூலம் நிர்வாக மேம்பாடுகள், இது RS-1 இன் கீழ் திட்ட நிர்வாகத்திற்காக மிகவும் பயனுள்ள மற்றும் வெளிப்படையான ஸ்மார்ட் சிலாங்கூர் நிர்வாகத்தை செயல்படுத்த உதவுகிறது.

## முற்போக்கான ஊதியக் கொள்கையை அமல்படுத்த அரசு உறுதி



**கோலாலம்பூர்-**

அரசு ஊழியர்கள் சம்பளம் மற்றும் படிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், தனியார் துறைக்கு முற்போக்கான ஊதியக் கொள்கையை கொண்டு வருவதில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் தெரிவித்தார்.

எஸ்எஸ்பிஏ மறுஆய்வு செய்வதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கை, தனியார் துறையும் தங்கள் ஊழியர்களின் ஊதியத்தை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற தெளிவான செய்தியை அனுப்புகிறது என்று அவர் கூறினார்.

"இதற்குக் காரணம் இளைஞர்களும் பட்டதாரிகளும் தனியார் துறையில் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். எனவே, முற்போக்கான ஊதியக் கொள்கை அறிமுகப்படுத்தப்படும், "என்று அவர் உள்ளூர் ஊடக சேனல்கள் மூலம் நாட்டு மக்களுக்கு நேரலை உரையில் தெளிவு படுத்தினார்.

பல ஆண்டுகளாக, மறுஆய்வு இல்லாமல் இருந்த ஊதிய முறையை மாற்றி, டிசம்பர் முதல் 13 சதவீதத்திற்கும் அதிகமான சம்பள உயர்வை அரசு ஊழியர்கள் அனுபவிப்பார்கள் என்று மே 1 அன்று அன்வார் அறிவித்தார்.

மக்களின் பொருளாதாரத்தை ஆதரிக்கவும், உள்ளூர் திறமைகளை மேம்படுத்தவும் பல்வேறு முயற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன, எனவே ஊதியம் மிகவும் நியாயமானதாக இருப்பதும் அவசியம் என்றார்.

புதிய, போட்டி மற்றும் அதிக மதிப்புள்ள தொழில்களை ஆதரிப்பதற்காக வணிக சூழலை மேம்படுத்துவது இதில் அடங்கும், எனவே உள்ளூர் பொருளாதாரத்தில் முதலீடுகளை அதிகரிக்க முடியும், இது மக்களின் ஊதியத்தில் மிகவும் அர்த்தமுள்ள உயர்வுக்கு வழிவகுக்கும் என்று அன்வார் கூறினார்.

உள்ளூர் தொழில்கள், குறிப்பாக செமிகண்டக்டர் துறை, உலக அங்கீகாரம் பெற்று வருகிறது, கூடுதல் மதிப்பு கொடுக்கப்படுகிறது என்று அவர் கூறினார், புதிய தொழில்துறை மாஸ்டர் பிளான் 2030க்குள் உற்பத்தி தொழில்துறை தொழிலாளர்களின் குறைந்தபட்ச மாத வருமானத்தை RM4,500 ஆக உயர்த்த இலக்கு கொண்டுள்ளது.

இளைஞர்களிடையே திறமையான உள்ளூர் திறன் மேம்பாட்டை வளர்க்க, நாட்டின் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை மறுகட்டமைப்பு செய்ய தொழில்துறை ஜாம்பவான்களுடன் அரசாங்கம் ஒத்துழைத்து வருவதாகவும் அன்வார் கூறினார்.

"நாட்டின் முதல் AI பீடத்தை யுனிவர்சிட்டி டெக்னாலஜி மலேசியாவில் நிறுவுவதன் மூலம் செயற்கை நுண்ணறிவு (AI) முன்னுரிமை அளிக்கப்படுகிறது, நாடு முழுவதும் உள்ள அனைத்து AI துறைகளையும் கொண்ட நெட்வொர்க்குகள், அறிவியல் மையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில்," என்று அவர் கூறினார்.

கஜானா நேஷனல் பிளசிட் RM1 பில்லியன் நிதியுடன், உயர் வளர்ச்சித் துறையில் நுழைவதற்கு புதிய தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது என்றார்.

கடுமையான வறுமையை ஒழிக்க, மாநில அரசுகளுடன் இணைந்து மக்கள் வருமான முன்முயற்சியை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது, அது இதுவரை "உறுதியான நம்பிக்கை அளிக்கும்" என்றார்.

## நிர்வாக பலவீனங்கள், ஊழல் பிரச்சனைகள் விரைந்து களையப்படும்

**கோலாலம்பூர்-**

நாட்டின் பொருளாதார வலிமையை பலவீனப்படுத்தும் கட்டமைப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னதாக பலவீனமான நிர்வாகம் மற்றும் திட்டமிடப்பட்ட பரவலான ஊழல் ஆகியவை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சனைகளாகும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தி மக்களின் மன உறுதியும் நம்பிக்கையையும் சீர்குலைக்கும் புற்றுநோயாக இந்த பிரச்சனை விளங்குகிறது என்று அவர் சொன்னார்.

எந்த ஒரு அனுமதியும் வழங்கப்படுவதற்கு முன்பே கமிஷன் வசூலிக்க விரும்பும் சில கும்பல்களின் தொந்தரவால் ஒவ்வொரு மட்டத்திலும் ஊழல் பெருகி மக்களுக்கு சுமையை ஏற்படுத்துகிறது.

அரசு கொள்முதலில் பேரம் பேசப்பட்ட டெண்டர் எனப்படும் நேரடிப் பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டு வெளிப்படையான டெண்டர் முறைக்கு மாற வேண்டும் என்று முதல் ஆண்டே வலியுறுத்தினேன் என்று அவர் கூறினார்.

மந்தமான வணிக சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் மத்திய அரசின் பலவீனமான நிதி நிலை ஆகியவை நாட்டின் பொருளாதாரத்தின் வலிமையை பலவீனப்படுத்தும் சிக்கல்கள்.

ஊழல்வாதிகளை தண்டிப்பது குறித்து பேசிய அவர், அதன் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதோடு சட்டப்பூர்வமான வழிகள் மற்றும் நீதிமன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

எனவே, அரச மலேசிய காவல்துறை, மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் மற்றும் தேசிய தணிக்கைத் துறை போன்ற அமலாக்க நிறுவனங்கள் உறுதியுடன் செயல்படுவதற்கு அரசாங்கம் முழு அதிகாரத்தை வழங்குகிறது என்று அவர் சொன்னார்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த நடைமுறை (ஊழல்) விரைந்து நிறுத்தப்பட வேண்டும். இதை நடைமுறைப்படுத்த கால அவகாசம் பிடிக்கும். செல்வத்தை பதுக்கி வைக்கும் கடந்த கால நடைமுறைக்கு ஏன் தீர்வு காணப்படவில்லை என்று பலரைப் போலவே நானும் பொறுமையிழந்து இருக்கிறேன் அவர் கூறினார்.

இந்த ஊழல் ஒழிப்பு முயற்சியை சிலர் சிறுமைப்படுத்தி, வெற்று அரசியல் முழக்கம் என்று கூறினாலும் தொடர்ந்து உறுதியாக போராடுவதன் மூலம் ஊழல் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் தெரிவித்தார்.

## திவேட் கல்வித் திட்டத்தில் சேர
### – எஸ்.பி.எம் எழுதாத மாணவர்களுக்கு அழைப்பு

**பெய்ஜிங்-**

கடந்தாண்டு எஸ்.பி.எம். தேர்வினை எழுதாத 10,160 மாணவர்கள் திவேட் எனப்படும் தொழில்நுட்ப மற்றும் தொழில்திறன் திட்டத்தில் கல்வியைத் தொடருமாறு துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி கேட்டுக் கொண்டுள்ளார்.

எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான சிறந்த விடையாக திவேட் கல்வித் திட்டம் விளங்குவதால் மாணவர்களும் பெற்றோர்களும் ஒருபோதும் மனம் உடைந்து போகக் கூடாது என்று அவர் சொன்னார்.

எஸ்.பி.எம். தேர்வில் தோல்வி கண்ட மற்றும் தேர்வை எழுதாத மாணவர்களை திவேட் கல்வித் திட்டம் ஏற்றுக் கொள்கிறது. திவேட் என்பது இரண்டாவது அல்லது மூன்றாவது தேர்வுதான் என்பது இதன் பொருளல்ல. மாறாக, கல்வியைத் தொடர (எஸ்.பி.எம். தேர்வை எழுதாத மாணவர்களுக்கு) இது இரண்டாவது வாய்ப்பாக அமைக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

கல்வியில் சிறந்து விளங்காத மற்றும் எஸ்.பி.எம். தேர்வை எழுதாத மாணவர்களுக்கு இந்த திவேட் திட்டம் பொருத்தமானதாக விளங்குகிறது. காரணம், இது 70 விழுக்காடு பட்டறை மற்றும் ஆய்வக பயிற்சிகளையும் 30 விழுக்காடு வகுப்பறை படிப்பையும் வழங்குகிறது என்றார் அவர்.

கடந்த 2023ஆம் ஆண்டு எஸ்.பி.எம். தேர்வு எழுதுவதற்கு தகுதி பெற்ற 383,685 மாணவர்களில் 10,160 பேர் தேர்வில் அமரவில்லை என்று கல்வித் துறை தலைமை இயக்குநர் அஸ்மான் அட்னான் கடந்த மே 27ஆம் தேதி கூறியிருந்தார்.

மாணவர்களின் முதல் தேர்வாக திவேட் திட்டத்தை பிரபலப்படுத்துவதற்காக இந்த துறை தொடர்பான விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் மலேசியாவிலுள்ள அனைத்து ஊடகங்களின் பிரதான ஆசிரியர்களின் உதவியை தாம் நாடவுள்ளதாகவும் ஜாஹிட் சொன்னார்.

## 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி

**கோலாலம்பூர்-**

உலகப் பொருளாதாரத்தின் நிச்சயமற்ற நிலையிலும், 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதாரத்தின் தற்போதைய நிலையைப் பற்றி கூறிய பிரதமர் இந்த 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்த நாட்டின் பொருளாதாரச் சாதனைகள் மிகவும் ஊக்கமளிக்கின்றன என்றார்.

2024 முதல் காலாண்டில், 4.2% என்ற விகித பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளோம்; இது 3.9% என்று கணிக்கப்பட்ட பெரும்பாலான கட்சிகளின் மதிப்பீட்டை விட அதிகமாகும்.

உலகப் பொருளாதார நிச்சயமற்ற நிலையிலும், 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாடு, ஏறக்குறைய அனைத்துத் துறைகளிலும் உயர்ந்த வளர்ச்சியை எட்டியது ஊக்கமளிப்பதாக குறிப்பிட்டார். அவற்றில்:

- தொழிலாளர் சந்தை 2.1% வளர்ச்சியடைந்து மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 16.4 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 1.6% ஆகப் பணவீக்கம் கட்டுப்பாட்டில் இருந்தது.
- 2024 இன் முதல் நான்கு மாதங்களில், மலேசியாவின் மொத்த வர்த்தகம் 8.3% அதிகரித்து RM912.27 பில்லியனாக உள்ளது. நாம் RM 41.83 பில்லியன் வர்த்தக உபரியைப் பெற்றோம்.
- மேலும் பெருமை என்னவென்றால், 1,600 புள்ளிகளைக் கடந்த FBM கோலாலம்பூர் பங்குச்சந்தை நிலையை எட்டியுள்ளோம், மேலும் உள்நாட்டு பங்குச் சந்தையின் மதிப்பு வரலாற்றில் RM2 டிரில்லியன் என்ற மிக உயர்ந்த எண்ணிக்கையை எட்டியுள்ளது.

இந்த மைக்ரோ பொருளாதாரச் சாதனை நாம் ஒன்றாக ஏற்றுக் கொண்டாட படவேண்டிய ஒன்று, ஆனால் அதிகமான மக்களின் கவனத்தை வாழ்வாதாரத்தின் தற்போதைய சுமைகள் ஈர்ப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இது நிஜம், இதை நான் மறுக்க விரும்பவில்லை என்றார்.

# 11,713 மாணவர்கள் 'ஏ' நிலையில் தேர்ச்சி



**புத்ராஜெயா-**

கடந்த 2023ஆம் ஆண்டு எஸ்.பி.எம். தேர்வு முடிவுகள் இன்று வெளியான நிலையில் மொத்தம் 11,713 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ஏ+, ஏ மற்றும் ஏ- மதிப்பெண்களுடன் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றுள்ளனர்.

கடந்த 2023ஆம் ஆண்டிற்கான எஸ்.பி.எம். தேர்வில் மாணவர்களின் தேசிய சராசரி மதிப்பெண் விகிதம் (ஜி.பி.என்.) 4.60 ஆகப் பதிவாகியுள்ளதாக கல்வித் துறை தலைமை இயக்குநர் அஸ்மான் அட்னான் கூறினார்.

அதற்கு முந்தைய ஆண்டு ஜி.பி.என். விகிதம் 4.74ஆக இருந்தது. குறைவான ஜி.பி.என். மதிப்பு மாணவர்களின் சிறப்பான அடைவு நிலையை பிரதிபலிக்கிறது.

கடந்தாண்டு எஸ்.பி.எம் தேர்வு எழுதிய 373,255 மாணவர்களில் 226,358 பேர் குறைந்தது அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த 2022ஆம் தேர்வினை எழுதிய 213,624 மாணவர்களில் 57.1 விழுக்காட்டினர் மட்டுமே அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சிப் பெற்றனர்.

மொத்தம் 93.5 விழுக்காட்டு மாணவர்கள் அல்லது 349,297 பேர் 2023ஆம் ஆண்டு எஸ்.பி.எம். தேர்வுச் சான்றிதழைப் பெறும் தகுதியைப் பெற்றுள்ளனர். கடந்த 2022இல் இந்த எண்ணிக்கை 342, 742 பேராகும் என்று இன்று இங்கு தேர்வு முடிவுகளை அறிவிக்கும் நிகழ்வில் அஸ்மான் கூறினார்.

# கல்வியமைச்சின் – 23,000 புத்தகப் பற்றுச் சீட்டுகள்



**புத்ராஜெயா-**

மலேசிய இலக்கவியல் கல்வி கற்றல் முன்னெடுப்பு (டெலிமா) செயலியைப் பயன்படுத்தி 23,000 க்கும் மேற்பட்ட புத்தக பற்றுச் சீட்டுகளை மாணவர்கள் மீட்டுள்ளதாக என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.

கடந்த மே மாதம் 31 முதல் டிசம்பர் 31 வரை மாணவர்கள் இந்த பற்றுச்சீட்டுகளை மீட்டுக்கொள்ளலாம் என கல்வியமைச்சு கூறியது.

அறிவாற்றலும் தொலைநோக்கு பார்வையும் கொண்ட தலைமுறையை உருவாக்கும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு ஏற்ப இந்த டெலிமா திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் என்று அமைச்சு குறிப்பிட்டது.

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த மே மாதம் 30ஆம் தேதி அறிவித்தது முதல் கல்வியமைச்சின் கீழுள்ள அனைத்து உயர் கல்விக்கூட மாணவர்களுக்கான இந்த புத்தக பற்றுச்சீட்டு திட்டம் ஊக்கமளிக்கும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்றும் அமைச்சு கூறியது.

# சிலாங்கூர் மாணவர் மேம்பாட்டுக்கு மாநில மக்கள் கல்வி போதனை திட்டம் (PTRS)

**ஷா ஆலம்-**

மாநிலத்தில் மேம்படுத்தப்பட்ட 2023 சிஜில் பெலஜாரன் மலேசியா (SPM) முடிவுகள் சிலாங்கூர் மக்கள் கல்வி போதனை திட்டம் (PTRS) ஓரளவு காரணமாகும் என்று மந்திரி புசார் சிலாங்கூர் (கட்டமைப்பு) அல்லது MBI தெரிவித்துள்ளது.

ஒரு அறிக்கையில், கார்ப்பரேட் அமைப்பு, கடந்த ஆண்டு SPM இல் 4.67 என்ற சராசரி தரத்தை (GPN) பதிவு செய்துள்ளது, முந்தைய ஆண்டில் 4.80 ஆக இருந்தது – GPN மதிப்பு சிறந்த சாதனையில் சிறிய முன்னேற்றத்தை குறிக்கிறது.

SPM சான்றிதழ்களைப் பெறத் தகுதி பெற்ற சிலாங்கூர் வேட்பாளர்களின் எண்ணிக்கை 2022 இல் 56,402 (89.25 சதவீதம்) இலிருந்து 58,082 (91.14 சதவீதம்) ஆக அதிகரித்துள்ளது.

மாநிலத்தின் இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் உள்ள ஆறு பாடங்களில் நான்கு – ஆங்கில மொழி, வரலாறு, அறிவியல் மற்றும் கணிதம் – மேம்பட்ட தேர்ச்சி சதவீதத்தை கண்டுள்ளதை MBI சுட்டிக்காட்டியது.

PTRS இன் கீழ் வழங்கப்படும் மற்ற இரண்டு பாடங்கள் மலாய் மொழி மற்றும் கணிதமாகும். "நான்கு பாடங்களில் வரலாற்றின் தேர்ச்சி சதவீதம் அதிகமாக இருந்தது, 2.03 சதவீதம் அதிகரித்துள்ளது" என்று இன்று அது கூறியது.

"2022 இல் 56,739 விண்ணப்பதாரர்கள் (89.96 சதவீதம்) ஒப்பிடுகையில், மொத்தம், 58,487 பேர் (91.99 சதவீதம்) தேர்ச்சி பெற்றுள்ளனர்."

"ஒட்டுமொத்தமாக, அனைத்து ஆறு PTRS பாடங்களுக்கான பாட சராசரி தரம் (GPMP) முந்தைய ஆண்டை விட 2023 இல் முன்னேற்றத்தைக் காட்டியது."

மே 27 அன்று, கல்வி இயக்குநர் ஜெனரல் அஸ்மான் அட்னான் அறிவித்தார், 2023 SPM தேர்வில் பங்கேற்ற 11,713 விண்ணப்பதாரர்கள் அனைத்து பாடங்களிலும் A+, A மற்றும் A- தரங்களுடன் சிறந்த முடிவுகளைப் பெற்றுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக, 2023 SPM வேட்பாளர்களும் முந்தைய ஆண்டில் 4.74 ஆக இருந்த தேசிய ஜிபிஎன் 4.60 உடன் சிறப்பாகச் செயல்பட்டனர்.

PTRS ஆனது MBI இன் சமூகப் பொறுப்பு மற்றும் தகவல் தொடர்புத் துறையால் நிர்வகிக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகிறது, மேலும் இது நிறுவனத்தின் பெருநிறுவன சமூகப் பொறுப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாகும்.

இந்த ஆண்டு முதல், இலவச கல்வித் திட்டம், படிவம் 4 மாணவர்களையும் சேர்க்கும் வகையில் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இது இப்போது கல்வியறிவு குறைந்த ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான தலையீட்டுத் திட்டங்களை வழங்குகிறது.

இந்த ஆண்டு திட்டத்தின் வெற்றியை உறுதி செய்வதற்காக மொத்தம் RM10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

# இளையோரின் திறனை வெளிப்படுத்த இளம் சட்டமன்ற உறுப்பினர் நிகழ்வு



**ஷா ஆலம்-**

இங்கு நடைபெற்ற 2024 சிலாங்கூர் இளம் சட்டமன்ற உறுப்பினர் (ஏடிஎன்) நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் வெளிப்படுத்திய திறனை மாநில சட்டமன்ற சபாநாயகர் பெரிதும் பாராட்டினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் வாதங்களை தரமான முறையில் முன்வைத்ததுடன் நடப்பு நிலவரங்கள் மற்றும் மாநில அரசின் கொள்கைகள் குறித்து பரந்த அறிவாற்றலையும் கொண்டுள்ளனர் என்று லாவ் வேங் சான் கூறினார்.

பொதுவில் அவர்களின் வாதத்திறமை மேம்பட்ட நிலையில் இருந்ததோடு தாங்கள் பிரதிநிதிக்கும் பகுதியின் விவகாரங்களை மிகச் சிறப்பான முறையிலும் முன்வைத்தனர். அதோடு மட்டுமின்றி மாநில அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களையும் அவர்கள் நன்கு அறிந்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

அடுத்த தலைமுறைத் தலைவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்வதற்கு ஏதுவாக இந்த திட்டத்தை அடுத்தாண்டும் தொடர்ந்து நடத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்று இங்குள் விஸ்மா டி.என்.எஸ்.சில் நடைபெற்ற இளம் சட்டமன்ற உறுப்பினர் தொடர்பான செய்தியாளர் கூட்டத்தின் போது அவர் சொன்னார்.

இந்த இளம் சட்டமன்ற உறுப்பினர் திட்டத்தை இடைநிலைப் பள்ளி நிலையிலும் விரிவுபடுத்த தாங்கள் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## கோவிட்-19 புதிய அலையை கையாள சிலாங்கூர் தீவிர ஆய்வு

**ஷா ஆலம்-**

சிலாங்கூர் மாநிலத்தில் கோவிட் -19 புதிய திரிபு கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பில் அறிக்கை கிடைக்கும் பட்சத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக சிங்கப்பூரில் நோய்த் தொற்று அதிகரித்து வருவதைத் தொடர்ந்து சிலாங்கூர் மாநில சுகாதாரத் துறையுடன் தமது தரப்பு இணைந்து இவ்விவகாரத்தை அணுக்கமாக கண்காணித்து வருவதாக ஜமாலியா ஜமாலுடின் தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள எந்த மருத்துவமனையிலும் புதிய திரிபு கண்டுபிடித்ததாக மாநில சுகாதாரத் துறை இதுவரை அறிவிக்கவில்லை. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் நாங்கள் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று அவர் குறிப்பிட்டார்.


எப்போதும் தங்களின் சுய பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளும்படி குடியிருப்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம். நெரிசலான இடங்களில் முகக்கவரியை அணியுங்கள். இவ்வாறு செய்வதன் மூலம் கோவிட்-19 நோயை தடுப்பது மட்டுமல்லாமல் இருமல் போன்றவை பிறருக்கு பரவாமல் தடுக்க முடியும் என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

சிங்கப்பூரில் தொற்றுநோய் இரட்டிப்பாகியதைத் தொடர்ந்து கோவிட் -19 நோய்த் தொற்றின் புதிய அலையை தாங்கள் ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஜூல்கிப்ளி அகமது கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தார்.

தற்போதைய நிச்சயமற்ற பருவநிலை உள்ளிட்ட சுற்றுப்புற சூழ்நிலைகள் கருத்தில் கொண்டு விழிப்புடன் இருக்கும் அதே வேளையில் தங்கள் உடல் நலத்தை கவனித்துக் கொள்ளும் படியும் பொது மக்களை ஜமாலியா அறிவுறுத்தினார்.

டிங்கி பரவலைத் தடுக்க ஏடிஸ் கொசுக்கள் அதிகம் உள்ள பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கவும். தற்போது வெப்பமான கால நிலையும் அப்படித்தான். நிறைய தண்ணீர் குடிப்பது வெயிலில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என்று அவர் ஆலோசனை கூறினார்.

## மரணத்தை விளைவிக்கும் இன்ஃபுளுயென்ஸா தொற்று



**ஷா ஆலம்-**

இன்ஃபுளுயென்ஸா தொற்று உடல் நலத்திற்கு பெரும் ஆபத்தை கொண்டு வரும் என சமூக சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இந்நோயின் தாக்கம் மூச்சுத் திணறல், காதுகளில் சீழ் வடிதல், நுரையீரல் வீக்கம் ஆகிய பாதிப்புகளை உண்டாக்கி மரணத்திற்கும் இட்டுச் செல்லும் என்று அவர்கள் கூறினர்.

இருமல் அல்லது தும்மலின் வாயிலாக ஆறு அடி அல்லது 1.83 மீட்டருக்கு அப்பால் உள்ளவர்களையும் இந்நோய் வைரஸ் பீடிக்கும் என்று பேராசிரியர் டாக்டர் ஷரிபா வான் பூத்தே விளக்கினார்.

காய்ச்சல் மற்றும் சளி போன்ற அறிகுறிகளை கொண்ட கோவிட்-19 நோய்த் தொற்றுடன் ஒத்திருக்கும் இந்த நோயின் பரவல் குறித்து பலர் இன்னும் அறிந்திருக்கவில்லை என்று மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறை நிபுணரான அவர் சொன்னார்.

இந்த வைரஸ் மூளை வரைச் சென்று கோவிட்-19 தொற்றுக்கான நுரையீரல் வீக்கம், மூச்சுத் திணறல் போன்ற அதே அறிகுறிகளை வெளிப்படுத்தும். சில சந்தர்ப்பங்களில் கோவிட்-19 மற்றும் இன்ஃபுளுயென்ஸா ஆகிய இரு நோய்களும் ஒரே சமயத்தில் தாக்கும் என அவர் தெரிவித்தார்.

இன்ஃபுளுயென்ஸா பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. அடிக்கடி பரவக்கூடிய இன்ஃபுளுயென்ஸா ஏ பறவைகள் வாயிலாக மட்டுமின்றி மனிதர்கள் மூலமாவும் பரவும் சாத்தியத்தைக் கொண்டுள்ளது என்றார் அவர்.

சிறார்கள், பலவித நோய்களால் பீடிக்கப்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் உடல் பருமனானவர்கள் இந்நோயின் தாக்கத்திற்கு ஆளாகும் சாத்தியத்தை அதிகம் கொண்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

## கிள்ளான் ஆற்றில் குப்பைகளின் அளவு மூன்று மடங்கு குறைந்தது

**கிள்ளான்-**

கிள்ளான் ஆற்றில் சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு 67 விழுக்காடு குறைந்துள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டு 16,000 மெட்ரிக் டன்களாக இருந்த குப்பைகளின் அளவு கடந்தாண்டு 5,800 டன்களாக குறைந்ததாக அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

கிள்ளான் ஆற்றில் நீடித்த நிலைத்தன்மையைக் காக்க லண்டாசான் லுமாயான் சென். பெர்ஹாட் நிறுவனம் அமல்படுத்தியுள்ள சிலாங்கூர் மெரிடைம் கேட்வே திட்டத்தின் ஒரு பகுதியாக இண்டசெப்டர் 002 இயந்திரத்தி வாயிலாக துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த துப்புரவுப் பணிகள் இண்டர்செப்டர் இயந்திரத்தை மட்டும் சார்ந்திராமல் அமலாக்க நடவடிக்கைகளையும் உட்படுத்தியுள்ளது என்று இஷாம் தெரிவித்தார்.

இது வரை இண்டர்செப்டர் இயந்திரத்தின் வழி ஆற்றில் குப்பைகளின் அளவு 67 விழுக்காடு வரை குறைந்துள்ளது. ஐந்தாவது ஆண்டில் நுழைந்த போதிலும் இந்த இயந்திரம் இன்னும் சிறப்பான முறையில் செயல்படுகிறது என்று அவர் சொன்னார்.

இண்டர்செப்டர் இயந்திரம் தவிர்த்து ஊராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் ஆற்றில் குப்பைத் தடுப்புகளையும் அமைத்துள்ளோம். அதோடு மட்டுமின்றி ஆற்றில் மாசுபாட்டைக் கண்டறிவதற்காக அடிக்கடி நீரில் சோதனை நடத்தப் படுவதோடு விழிப்புணர்வு இயக்கங்களும் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

சிலாங்கூரில் உள்ள ஆறுகளின் தரத்தை மேம்படுத்தும் மாநில அரசின் முயற்சிகள் முழுமையாக வெற்றியடையாத போதிலும் இத்தகைய முன்னெடுப்புகள் ஒவ்வோராண்டும் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும் என்றார் அவர்.

கடந்த 2016 முதல் 2023 வரையிலான காலக்கட்டத்தில் மொத்தம் 88,000 டன் குப்பைகளை லண்டாசான் லுமாயான் நிறுவனம் வெற்றிகரமாக அகற்றியது. இண்டர்செப்டர் 005 மற்றும் இண்டர்செப்டர் 002 ஆகியவற்றோடு ஆற்றில் அமைக்கப்பட்ட ஏழு குப்பைத் தடுப்புகள் வாயிலாகவும் இந்த குப்பைகள் அகற்றப்பட்டன.



# மலேசியா—ஜப்பான் வர்த்தக வளர்ச்சிக்கு செமிகண்டக்டர்

**தோக்கியோ-**

ஜப்பானுடனான மலேசியாவின் வர்த்தகம் குறிப்பாக செமிகண்டக்டர் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைகளில் முதலீடுகள் இவ்வாண்டு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுவதாக முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் தெங்கு டத்தோஸ்ரீ ஸப்ருல் அப்துல் அஜிஸ் கூறினார்.

கடந்தாண்டு, ஜப்பானுடனான வர்த்தகம் சுமார் 3,500 கோடி வெள்ளியாக இருந்தது. இதில் மூன்றில் ஒரு பங்கு திரவமய இயற்கை எரிவாயுவை உள்ளடக்கியிருந்தது என்று அவர் மலேசிய செய்தியாளர்களிடம் கூறினார்.

மலேசியா ஜப்பானுக்கு பாதுகாக்கப்பட்ட எரிசக்தியை வழங்கி வருவதாகவும் இப்போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீது கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜப்பான் தொடர்ந்து ஒன்பது ஆண்டுகளாக மலேசியாவின் நான்காவது பெரிய வர்த்தக பங்காளியாக இருந்து வருகிறது.

கடந்த மே 22 முதல் 24 வரை பிரதமர் அன்வார் இப்ராஹிம் ஜப்பானுக்கு மேற்கொண்ட பயணத்தின் போதுஜப்பானிய நிறுவனங்களுடன் நடத்திய சந்திப்புகளின் மூலம் மலேசியா 145 கோடி வெள்ளி மதிப்புள்ள முதலீடுகள் மற்றும் 55 கோடி வெள்ளி மதிப்பிலான ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெற்றது.

மலேசியாவில் ஏற்கனவே உள்ள ஆறு நிறுவனங்களும் நாட்டில் புதிதாக முதலீடு செய்ய விரும்பும் ஒரு நிறுவனமும் இந்த சந்திப்புகளில் ஈடுபட்டன.

மலேசியாவில் முதலீடு செய்யத் திட்டமிடும் நிறுவனங்களில் ஒன்று செமிகண்டக்டர் தொழிலைச் சேர்ந்தது என்று கூறிய தெங்கு ஸப்ருல், உரிய அனுமதி கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயர் அறிவிக்கப்படும் என்றார்.

மற்ற நிறுவனங்கள் மலேசியாவில், குறிப்பாக சபா மற்றும் சரவாக்கில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் புதிய முதலீடுகளைச் செய்வதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தின என்றார் அவர்.



## ஜப்பானிடமிருந்து வெ.145 கோடி முதலீடு, வெ.55 கோடி ஏற்றுமதி வாய்ப்புகள் பதிவு

**தோக்கியோ-**

ஜப்பானிலிருந்து 145 கோடியே வெள்ளி முதலீடு மற்றும் 55 கோடி வெள்ளி ஏற்றுமதி வாய்ப்புகளை மலேசியா பெற்றுள்ளதாக முதலீடு, வர்த்தகம் மற்றும தொழிலியல் அமைச்சு கூறியது. கடந்த மே 22 முதல் 24 வரை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் ஜப்பானுக்கு மேற்கொண்ட குறுகிய கால வருகையின் போது அந்நாட்டு நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பின் விளைவாக இந்த முதலீட்டு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் பெறப்பட்டன.

இந்த முதலீட்டின் வாயிலாக சில திட்டங்கள் அடுத்த மூன்றாண்டுகளில் அமல்படுத்தப்படும் என்றும் இதன் வழி செமிகண்டக்டர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பசுமைத் தொழில் நுட்பத் துறைகளில் வலுவான சூழியல் முறையை உருவாக்க இயலும் என்று அமைச்சு கூறியது.

மேலும், அவற்றில் சில திட்டங்கள் வரும் 2050ஆம் ஆண்டுவாக்கில் கார்பன் வெளியேற்றத்தை சுழியம் அளவுக்கு குறைக்கும் இலக்கை மலேசியா அடைவதற்கான உந்து சக்தியாகவும் விளங்கும் என அது குறிப்பிட்டது.

பிரதமரின் இந்த பயணத்தின் போது தொழிலியல் அமைச்சுடன் சந்திப்பு நடத்திய நிறுவனங்களில் ஐ.எச்.ஐ. கார்ப்ரேஷன், நிஷின் ஒய்லியோ குழுமம், தாக்குயுமா கார்ப்ரேஷன், சுமிதோமோ கார்ப்ரேஷன், இனோஸ் ஹோல்டிங்ஸ், மிட்ஸிபிட்ஷி கார்ப்ரேஷன் மற்றும் தோக்கியோ கேஸ் ஆகிய நிறுவனங்களும் அடங்கும்.

குறுகிய கால பயணமாக இருந்தாலும் அதிக பயனை அதாவது 145 கோடி வெள்ளி முதலீடு மற்றும் 55 கோடி வெள்ளி ஏற்றுமதி வாய்ப்புகளை பெற்றது குறித்து நாங்கள் பெருமிதம் அடைகிறோம் என்று அமைச்சர் தெங்கு டத்தோஸ்ரீ ஸப்ருள் அப்துல் அஜிஸ் அறிக்கை ஒன்றில் கூறினார்.

## 100,000 டிஜிட்டல் நிபுணர்களுக்கு பயிற்சி — ஜப்பான் விருப்பம்



**தோக்கியோ-**

அடுத்த ஐந்தாண்டுகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் செமிகண்டக்டர் துறைகளில் 100,000 உயர் திறன் கொண்ட டிஜிட்டல் நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்க ஆசியானுடன் இணைந்து செயல்பட ஜப்பான் விரும்புகிறது என்று பிரதமர் ஃபுமியோ கிஷிடா நேற்று தெரிவித்தார்.

ஜப்பான் தலைமையிலான ஆசிய சுழியம் உமிழ்வு சமூக கட்டமைப்பின் ஆஸ்திரேலியா மற்றும் ஆசியான் (மியான்மர் நீங்கலாக) நாடுகளை உள்ளடக்கிய இரண்டாவது அமைச்சர் நிலைக் கூட்டம் வரும் ஆகஸ்ட் மாதம் ஜகார்த்தாவில் நடைபெறும் என்று கிஷிடா தனது உரையில் கூறியதாக கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பிராந்திய நாடுகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு மத்தியில் இந்த முன்னெடுப்பு செயலாக்கம் காண்கிறது.

அடுத்த தலைமுறை வாகனத் தொழில் துறையை மேம்படுத்த ஜப்பான் மற்றும் ஆசியான் 2035 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு கால வியூகத்தை உருவாக்கும் திட்டம் விரைவில் வெளியிடப்படும் என்று கிஷிடா கூறினார்.

ஜகார்த்தாவை தலைமையிடமாகக் கொண்ட ஆசியான் மற்றும் கிழக்கு ஆசியாவிற்கான பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்த வியூகம் வகுக்கப்படும்.

## 5,125 மலேசிய மாணவர்களுக்கு திவேட் பயிற்சி — சீன நிறுவனங்கள் தயார்

**பெய்ஜிங்-**

தொழில்நுட்ப மற்றும் தொழில் திறன் (திவேட்) தொடர்பான குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட காலப் பயிற்சிகளை மலேசிய மாணவர்களுக்கு வழங்க சீனாவின் 220 நிறுவனங்கள் 5,125 இடங்களை ஒதுக்கியுள்ளன.

மலேசியாவில் திவேட் பயிற்சித் துறையை அடுத்தக் கட்டத்திற்கு கொண்டுச் செல்வதற்குரிய கேம் சேஞ்சர் எனப்படும் சூழலை மாற்றியமைக்கும் நிகழ்வாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய திறன்மிக்க தொழிலாளர் அமைப்பு மற்றும் சீனாவில் திவேட் தொடர்புடைய தொழில்துறை நிறுவனங்களான பீஃபாங் ஆட்டோமோட்டிவ் கல்விக் குழுமம் மற்றும் டாங் அனைத்துலக கல்விக் குழுமம் ஆகியவற்றுக்கிடையில் நேற்றிரவு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வாயிலாக இந்த கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி கூறினார்.

இந்த பயிற்சித் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள கோட்டாவில் மலேசியாவில் உள்ள சீன மாணவர்களுக்கு 500 இடங்கள் மற்றும் இந்திய மற்றும் சபா, சரவா மாணவர்களுக்கு 200 இடங்களை ஒதுக்கீடு செய்வதும் இதில் அடங்கும் என்று தேசிய திவேட் மன்றச் செயல்குழுவின் தலைவருமான அவர் தெரிவித்தார்.

இந்த ஒத்துழைப்பின் வாயிலாக வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புகளில் இ.வி. எனப்படும் மின்சார வாகனம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வாகனம், ரோபோட்டிக், பொருள் இணையம் மற்றும் ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு ஆகியவையும் அடங்கும் என்று அவர் சொன்னார்.

இந்த திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மூன்று மாத குறுகிய காலப் பயிற்சியும் ஆறு மாத மத்திய காலப் பயிற்சியும் ஆறு மாதம் முதல் மூன்று வருடங்கள் வரையிலான நீண்ட காலப் பயிற்சியும் வழங்கப்படுகிறது என்று அவர் சொன்னார்.

இங்கு நடைபெற்ற மலேசிய- சீன அனைத்துலக தொழில்துறை-திவேட் கல்விக் கழகத்தின் நிகழ்ச்சி மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் சடங்கு ஆகியவற்றில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்மாதம் 22ஆம் தேதி தொடங்கி வரும் சனிக்கிழமை வரை ஜாஹிட் சீனாவுக்கு மேற்கொண்டுள்ள அதிகாரப்பூர்வ வருகையின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# 2024 தேசிய நிலவடிவமைப்புத் தினத்தை பேரரசர் தொடக்கிவைத்தார்

**ஷா ஆலம்-**
இவ்வாண்டிற்கான தேசிய நில வடிவமைப்பு தினத்தை மாட்சிமை தங்கிய பேரரசர் சுல்தான் இப்ராஹிம் இங்குள்ள தாமான் தாசேக் ஷா ஆலமில் தொடக்கி வைத்தார்.

அரச குடும்பத்தினரை வீடமைப்பு மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் ங்கா கோர் மிங், துணையமைச்சர் டத்தோ அய்மான் அதிரா சாபு மற்றும் சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி ஆகியோர் வரவேற்றனர்.

மேலும் வீடமைப்பு மற்றும் கலாசாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் பொர்ஹான் அமான் ஷா, பொது சுகாதாரத் துறைக்கான ஆடசிக்குழு உறுப்பினர் ஜமாலியா ஜமாலுடின், இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் நஜ்வான் ஹலிமி, சிலாங்கூர் மாநில அரசு செயலாளர் டத்தோ ஹாரிஸ் காசிம், தேசிய போலீஸ் படைத் தலைவர் டான்ஸ்ரீ ரசாருடின் ஹூசேன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதனிடையே, இந்நிகழ்வில் தொடக்க உரையாற்றிய அமைச்சர் ங்கா, தேசிய நில வடிவமைப்பு ஒருங்கமைப்பு முறையை தேசிய நில வடிவமைப்புத் துறை தீவிரமாக மேம்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

மூன்றாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடரைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போது மாட்சிமை தங்கிய பேரரசர் கூறியது போல் நடப்புத் தேவைகளுக்கு ஏற்ப நிலையான பொருளாதாரத்துடன் நாட்டின் போட்டியிடும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக புதுப்பிக்கத் தக்க நிகழ்ச்சி நிரலின் அமலாக்கம் மூலம் ஆக்ககரமான அணுகுமுறைகளை அரசாங்கம் அமல்படுத்தி வருகிறது என அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் நிலவடிவமைப்பை புதிய பொருளாதார வளமாக மாற்றுவதற்கு வீடமைப்பு மற்றும் ஊராட்சித்துறை அமைச்சின் வியூகத்திட்டம் இலக்குகளை நிர்ணயித்துள்ளது என அவர் சொன்னார்.



# 2024 தேசிய நில வடிவமைப்பு தினக் கொண்டாடத்தில் பல்வேறு கண்காட்சிகள்




**ஷா ஆலம்-**
தேசிய நிலவடிவமைப்பு தினம் (HLN) 2024 மே 24 முதல் ஜூன் 2 வரை அருகிலுள்ள தாமான் தாசிக் ஷா ஆலமில் நடைபெற்றது.
தேசிய நில சுற்றமைப்பு மேம்பாட்டு துறை மற்றும் ஷா ஆலம் சிட்டி கவுன்சில் (எம்பிஎஸ்ஏ) இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சி 10 நாட்களுக்கு காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும்.

எம்பிஎஸ்ஏ சமூக மேம்பாட்டு இயக்குநர் ஷஹ்ரின் அகமது கூறுகையில், சிற்பக் கண்காட்சிகள், இயற்கை காட்சிகள், மரம் விற்பனை, நாட்டுப்புற விளையாட்டுகள் மற்றும் தொழில் சார்ந்த மன்றங்கள் உள்ளிட்ட பல்வேறு சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.
"இந்த HLNக்கு தினமும் 4,000 முதல் 8,000 பார்வையாளர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். கூடுதலாக பள்ளி பருவ விடுமுறையாகும் என்றார்

"பல்வேறு சுவாரஸ்யமான நடவடிக்கைகள் வழங்கப்படுவதால், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பொதுமக்கள் அழைக்கப்படுகிறார்கள். லாமன் புடாயாவில் நடைபெறும் லெபக் சேனி நிகழ்ச்சியிடன் இந்நிகழ்ச்சியும் உள்ளது," என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

கடந்த வாரம், வீட்டுவசதி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் Nga Kor Ming, யாங் டி-பெர்துவான் அகோங் சுல்தான் இப்ராஹிம், நிகழ்வின் இரண்டாவது நாளில் கொண்டாட்டத்தின் தொடக்க விழாவை நிறைவு செய்வதில் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார்.
'லேண்ட்ஸ்கேப் இண்டஸ்ட்ரி டிரைவிங் சிவில் டெவலப்மென்ட்' என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த கொண்டாட்டம், லேண்ட்ஸ்கேப் தொழில் ஆர்வலர்கள் தங்கள் தயாரிப்புகளை விளம்பரப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் ஒரு களமாக இருக்கும் என்றார்.

10 நாட்களில், அனைத்து தரப்பிலிருந்தும் 50,000 பார்வையாளர்களைப் பெற அவர் இலக்கு வைத்துள்ளார்.

# ஜனவரி முதல் அக்ரோ மடாணி விற்பனைகள்

**தவாவ்-**
கடந்த ஆண்டு ஜனவரி 1 முதல் மே 12 வரை நடத்தப்பட்ட மொத்தம் 2,745 சிவில் வேளாண் விற்பனை மூலம் சுமார் 16.8 மில்லியன் ரிங்கிட் மதிப்பிலான கொள்முதல் சேமிப்பு மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளது என்று வேளாண் மற்றும் உணவுப் பாதுகாப்பு துணை அமைச்சர் டத்தோ ஆர்தர் ஜோசப் குருப் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம் 31,000 க்கும் மேற்பட்ட உள்ளூர் தொழில் முனைவோர், அரசாங்கத்தின் வழிகாட்டுதல் பெற்ற தொழில் முனைவோர் உட்பட, அந்தந்த காலப்பகுதியில் RM 56.55 மில்லியன் விற்பனையை பதிவு செய்ததன் மூலம் அந்தந்த தயாரிப்புகளை சந்தைப் படுத்தியதாகவும் அவர் கூறினார்.

மடாணி மெகா அக்ரோ நிறுவனம் விற்பனையை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்தத் திட்டம் அரிசி, புதிய மீன், காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்ற பொருட்களை உற்பத்தியாளர்கள் அல்லது தொழில் முனைவோர் இடமிருந்து நேரடியாக பெறுவதின் வழி 30 சதவிகிதம் வரை விலை சேமிக்க உதவுகிறது," என்று அவர் மடாணி மெகா அக்ரோவில் கூறினார்.

இங்கு விற்பனை விழா விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு (KPKM) மத்திய வேளாண் சந்தைப்படுத்தல் வாரியம் (FAMA), விவசாயிகள் அமைப்புகளின் வாரியம் (LPP) மற்றும் மலேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (LKIM) ஆகியவற்றின் கூட்டு செயல்பாடுகள்.

அவரைப் பொறுத்தவரை, KPKM நாடு முழுவதும் 5,000 சிவில் வேளாண் விற்பனை களை நடத்தும் இலக்கை கொண்டுள்ளது என்றார்.

# சிலாங்கூர் ஃபாமா விழா – விற்பனை மதிப்பு RM700,000

**சுபாங் ஜெயா-**
ஜூன் 27 முதல் 30 வரை நடைபெறும் சிலாங்கூர் பாமா விழா (ஃபமா ஃபெஸ்ட்@சிலாங்கூர்) நிகழ்ச்சியின் போது மத்திய விவசாய மார்கெட்டிங் போர்டு (ஃபாமா) RM750,000 விற்பனை மதிப்பை இலக்காகக் கொண்டுள்ளது.

ஃபமா நெகிரி சிலாங்கூர் இயக்குனர் ஐயாடா அப்துல் ரஷீத் கூறுகையில், கிள்ளானில் உள்ள ஏயோன் மால் புக்கிட் திங்கியின் வாகன நிறுத்துமிடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு 50,000 வருகையாளர்கள் ஈர்க்க தங்கள் இலக்கு வைத்துள்ளதாக கூறினார்.

"Fruit & Food Fiesta Program அல்லது Fama Fest என்பது விவசாயப் பொருட்கள் மற்றும் உள்ளூர் உணவுகளை பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தவும் அறிமுகப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்திர நிகழ்வுகளில் ஒன்றாகும்.

"இந்த ஆண்டு மொத்தம் எட்டு தொடர் ஃபாமா ஃபெஸ்ட் நிகழ்வுகள் பேராக்கில் உள்ள கோபெங் நகர்ப்புற உருமாற்ற மையம் (ஆர்டிசி), சரவாக்கில் உள்ள மிரி மற்றும் நெகிரி செம்பிலானில் உள்ள நீலாய் ஆகியவற்றில் தொடங்கி, கிளந்தான், பகாங், கோலாலம்பூர் மற்றும் சபாவில் தொடரும்" என ஃபாமா அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

200 தொழில்முனைவோர் பங்கேற்பதுடன், ஜூன் 29 ஆம் தேதி விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் சாபு அவர்களால் தொடங்கப்பட உள்ளதாக ஐயாடா கூறினார்.

"திட்டத்தின் மூலம் கிடைக்கும் மெனு ஈர்ப்புகளில் 150 மலாய் பாரம்பரிய உணவு மெனுக்கள் மற்றும் 100 விற்பனை இடங்களைக் கொண்ட 150 மின் வணிக உணவு மெனுக்களும் அடங்கும்.

"கூடுதலாக, ஐந்து முதல் 30 சதவிகிதம் வரையிலான விலை சேமிப்பு மற்றும் காய்கறிகள், வெங்காயம், எண்ணெய் மற்றும் முட்டைகள் கொண்ட RM10 மதிப்பிலான 1,000 மடாணி காம்போ செட்களை வழங்கும் அக்ரோ மடாணி விற்பனை உள்ளது," என்று அவர் கூறினார்.



19 மே 2024 அன்று கோலா குபு பாருவில் சிலாங்கூர் அளவில் தேசிய இளைஞர் தினம் 2024 கொண்டாட்டம், டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி வருகை




28 மே 2024 அன்று கோலாலம்பூரில் உள்ள MITEC இல் `SEMICON` தென்கிழக்கு ஆசியா 2024இன் தொடக்க விழாவில் முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் தெங்கு டத்தோஸ்ரீ ஜஃப்ருல் தெங்கு அப்துல் அஜீஸ், டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியுடன் கலந்து கொண்டார்




2024 தேசிய நில வடிவமைப்பு தினத்தை முன்னிட்டு 21 மே 2024 அன்று தாமான் தாசிக் ஷா ஆலமில் முன் ஏற்பாடுகள்



4 ஜூன் 2024 அன்று பெட்டாலிங் ஜெயா ஸ்ரீ செத்தியா தொகுதியில் நடைபெற்ற சந்தையில் பொருட்களை மக்கள் மலிவாக வாங்கினர்



ஜூன் 2024 அன்று லாமன் புடாயா, தாமான் தாசிக் ஷா ஆலமில் நடந்த 'Fun Run @ National Landscape Day 2024' இல் இளைஞர் விளையாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் முகமட் நஜ்வான் ஹலிமி மற்றும் ஷா ஆலம் துணை மேயர் மடியான் பாவே கலந்து கொண்டனர்




6 ஜூன் 2024 அன்று எம்பிஎஸ்ஏ மண்டபத்தில் ஷா ஆலமின் 12வது மேயராகப் பதவியேற்ற டத்தோ முகமட் ஃபௌசி முகமட் யாதிம், மடியான் பாவே துணை மேயரிடமிருந்து பணி ஒப்படைப்புக் குறிப்பைப் பெறுகிறார்.



## உணவுப் பாதுகாப்பு செயல்முறைகளை வலுப்படுத்த — எவெரெக்ஸ் ஒத்துழைப்பு

**ஷா ஆலம்-**

உணவு வளாகத் தூய்மை பிரச்சாரத்திற்கு வலுசேர்க்கும் வகையில் ரசாயனங்கள் மற்றும் தூய்மை துறைகளில் நிபுணத்துவம் பெற்ற எவெரெக்ஸ் டெக்னாலஜி சென். பெர்ஹாட் நிறுவனத்துடன் ஷா ஆலம் மாநகர் மன்றம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம் ஓ யு) கையெழுத்- திட்டுள்ளது.

2025 சிலாங்கூருக்கு வருகை தாருங்கள் ஆண்டு இயக்கத்திற்கு தயார் படுத்திக் கொள்ளும் மாநிலத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் மாநகர் மன்றத்தின் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைந்துள்ளது என்று மாநகர் மன்றத்தின் வர்த்தகத் தொடர்புப் பிரிவு இயக்குநர் முகமது அசார் முகமது ஷெரிப் கூறினார்.

உணவு வளாகத்தின் தூய்மை பிரச்சாரத்தில் 300 உணவு வணிக நடத்துனர்கள் மற்றும் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வரும் வளாகங்களில் தூய்மை நிலைகளை மேம்படுத்துதல், குறைந்த தூய்மை கொண்ட வளாகங்களில் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அனைத்து உணவு வளாகங்களிலும் மிக உயர்ந்த தூய்மைத் தரத்தை உறுதி செய்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

2025/2026 சிலாங்கூருக்கு வருகை தாருங்கள் ஆண்டை முன்னிட்டு ஷா ஆலமில் உள்ள ஒவ்வொரு உணவு வளாகத்தின் தூய்மையையும் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளை பூர்த்தி செய்துள்ளதை உறுதி செய்ய விரும்புகிறோம் என அவர் குறிப்பிட்டார்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தூய்மை தொடர்பான நடைமுறைகள் குறித்து உணவு வளாகங்களை நடத்துபவர்களுக்கு விரிவாக எடுத்துரைப்பது இதன் நோக்கமாகும் என்று அசார் கூறினார்.

கடந்த மே 21 ஆம் தேதி நடைபெற்ற இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் சடங்கில் ஷா ஆலம் டத்தோ பண்டார் செரேமி தர்மான், எவெரக்ஸ் கெமிக்கல்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் கெவின் தான் மற்றும் மாநகர்மன்ற உறுப்பினர்களும் நிர்வாகப் பிரிவினரும் கலந்து கொண்டனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, ஷா ஆலமில் 4,117 உணவு வளாகங்களுக்கு மாநகர் மன்றம் உரிமம் வழங்கியுள்ளது.




## ஷா ஆலம் டத்தோ பண்டாராக டத்தோ பவுஸி நியமனம்

**ஷா ஆலம்-**

சுபாங் ஜெயா மாநகர் மன்றத்தின் டத்தோ பண்டார் டத்தோ பவுஸி முகமது யாத்திம் ஷா ஆலம் மாநகர் மன்றத்தின் டத்தோ பண்டாராக வரும் ஜூன் மாதம் 4ஆம் தேதி பதவியேற்கிறார்.

நடைபெற்ற சுபாங் ஜெயா மாநகர் மன்றத்தின் கூட்டத்திற்கு இறுதியாக தலைமையேற்ற போது இந்த தகவலை அவர் வெளியிட்டார். தமது பதவி காலத்தில் முழு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து பணியாளர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

நான் பதவியில் இருந்த போது எனக்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன். சுபாங் ஜெயா மாநகர் மன்றத்தில் பணியாற்றிய நினைவுகள் என் மனதில் என்றும் பசுமையாக இருக்கும் என அவர் சொன்னார்.

இதனிடையே, வாரிசான் எம்.பி.எஸ்.ஜே. 2024 குழு இசை மற்றும் பாரம்பரிய கலாசார நடன பயிற்சிப் பட்டறையில் பங்கேற்கும்படி தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளி மாணவர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

பாடாட் எனப்படும் மலாய் பாரம்பரிய மற்றும் கலாச்சார கழகம், டெலியன் ஸ்டூடியோ ஆகியவற்றின் ஆதரவிலான இந்த பயிற்சிப் பட்டறை காம்ப்ளக்ஸ் 3கே எஸ் எஸ் 13 ல் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

## சட்டவிரோதமாகக் குப்பைகளை கொட்டிய லோரிகள் பறிமுதல்

**உலு லங்காட்-**

சட்டவிரோத குப்பை கொட்டும் பகுதிகளில் கழிவுகளை கொட்டியதற்காக 46 குப்பை லோரிகளை காஜாங் நகராண்மைக் கழகம் பறிமுதல் செய்தது .

இவ்வாண்டு ஜனவரி முதல் மே வரை 253,000 வெள்ளி மதிப்புள்ள அந்த லோரிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப் பட்டதாக நகராண்மைக் கழக தலைவர் நஸ்லி முகமது தாயிப் கூறினார்.

இவ்வாண்டு ஜனவரி முதல் மே வரை சட்டவிரோத குப்பைக் கொட்டும் மையங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம் அந்த லோரிகள் பறிமுதல் செய்யப் பட்டன என்று அவர் தெரிவித்தார்.

காஜாங் நகராண்மைக் கழகத்தின் 2007ஆம் ஆண்டு குப்பை சேகரிப்பு, அகற்றல் மற்றும் அழிப்பு விதியின் கீழ் இந்த அபராத விதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று இன்று நகராண்மைக் கழகக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய பின்னர் செய்தியாளர் கூட்டத்தில் அவர் கூறினார்.

சட்டவிரோத குப்பைக் கொட்டும் பகுதிகளில் குப்பைகளைக் கொட்டும் நடவடிக்கைகளைத் தடுக்க தமது தரப்பு தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ளும் என்று நஸ்லி குறிப்பிட்டார்

காஜாங் நகராண்மைக் கழக நிர்வாகப் பகுதியில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அதே வேளையில் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என உறுதியளிக்கிறோம் என்று அவர் கூறினார்.

## வழிபாட்டு தளங்கள், பள்ளிகள் போன்ற இலாப நோக்கமற்ற இடங்களுக்கு வரி விலக்கு

**ஷா ஆலம்-**

வழிபாட்டு தளங்கள், பள்ளிகள் மற்றும் இலாப நோக்கம் அற்ற பொது இடங்கள் ஆகியவை மதிப்பீட்டு வரியில் இருந்து விலக்கு அளிக்கக்கூடியவை என்று ஷா ஆலம் மாநகராட்சி (எம்பிஎஸ்ஏ) தெரிவித்துள்ளது.

கல்லறைகள் அல்லது தகன இடங்களுக்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளதாக கூறிய மாநகரமன்றம், முகநூலில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் குறித்து எடுக்கப்பட்ட வீடியோ கிளிப் மூலம் தெரிவித்துள்ளது.

விதிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வரியின் மறுமதிப்பீடு குறித்து கருத்து தெரிவித்த எம்பிஎஸ்ஏ, நிர்வாகச் செலவு மற்றும் சேவைச் செலவுகளை வரி வருவாயுடன் சமன்படுத்துவதாக விளக்கியது.

தற்போது விதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரியும் 2006 மதிப்பீட்டு அளவை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் சேவைகளுக்காக எம்பிஎஸ்ஏ ஆல் ஏற்றுகொள்ளப்படும் செலவுகள் சமீபத்திய செலவுகள் ஆகும்.

அதன் அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள ஷா ஆலம் குடியிருப்பாளர்கள் மேலும் தகவலுக்கு எம்பிஎஸ்ஏ இன் முகநூல் பக்கத்தைப் பார்க்கவும்.



# அனைத்துலகப் புத்தக விழா – 50,000க்கும் மேற்பட்டோர் வருகை

**கோலாலம்பூர்-**

இங்குள்ள உலக வாணிக மையத்தில் நடைபெறும் 2024 கோலாலம்பூர் அனைத்துலக புத்தக விழாவில் இடம் பெற்றுள்ள பெவிலியன் சிலாங்கூர் காட்சிக்கூடத்திற்கு ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் வருகை புரிந்தனர்.

அதிகமான வருகையாளர்களை ஈர்ப்பதற்காக மாநில அரசு நிறுவனங்களின் கண்காட்சி, விவாத நிகழ்வு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு இந்த கண்காட்சிக் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டதாக அதன் ஒருங்கிணைப்பாளர் ஜப்ருல்லா அரிஸ் கூறினார்.

கால்பந்து விளையாட்டாளர் ஃபைசால் ஹலிமுக்கு தார்மீக ஆதரவை வழங்குவதற்காக சிலாங்கூர் எப்.சி. கால்பந்து விளையாட்டாளர்கள் இங்கு ஜெர்சிகளை விற்பனை செய்ததோடு சிலாங்கூர் யூத் கம்யூனிட்டி தொழில்முனைவோர்களும் தங்கள் தயாரிப்பு பொருள்களை விற்பனை செய்தனர் என்று அவர் தெரிவித்தார்.

கடந்தாண்டைப் போலவே இம்முறையும் இலக்கியவாதிகளுடன் கலந்துரையாடல் நிகழ்வுகளை தினமும் இங்கு ஏற்பாடு செய்கிறோம். அவர்கள் தங்களின் அனுபவங்கள் மற்றும் வெற்றியின் இரகசியங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்குரிய தளமாக இது விளங்குகிறது என்றார் அவர்.

தினமும் காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படும் இந்த கண்காட்சிக் கூடத்தில் பல்வேறு இலக்கியவாதிகள் பங்கேற்கும் நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன என்று அவர் மேலும் சொன்னார்.

இவ்வாண்டிற்கான அனைத்துலக புத்தக கண்காட்சி இங்குள்ள உலக வாணிக மையத்தில் கடந்த மே 24ஆம் தேதி தொடங்கி ஜூன் 2ஆம் தேதி வரை நடைபெற்றது. இங்கு திறக்கப்பட்ட 969 காட்சிக்கூடங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளின் புத்தக பதிப்பகத்தார் தங்களின் படைப்புகளை காட்சிக்கு வைத்திருந்தனர்.

# அனைத்துலகப் புத்தகக் கண்காட்சி

## வருகையாளர்களைப் பெரிதும் ஈர்த்தது





**கோலாலம்பூர்-**

இங்கு கடந்த வாரம் நடைபெற்ற 41வது கோலாலம்பூர் அனைத்துலகப் புத்தக விழா 18 லட்சத்திற்கும் மேற்பட்ட வருகையாளர்களை ஈர்த்தது.

கடந்த மே மாதம் 24ஆம் தேதி தொடங்கி ஜூன் 2 வரை கோலாலம்பூரின் உலக வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்த புத்தகக் கண்காட்சியில் ஈரான், இந்தியா, சீனா, தைவான், சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 241 பங்கேற்பாளர்கள் 972 கண்காட்சிக் கூடங்களில் தங்களின் புத்தகங்களை காட்சிக்கு வைத்திருந்தனர்.

சிலாங்கூர் மாநில அரசும் சிலாங்கூர் பொது நூலகக் கழகத்தின் (பி.பி.ஏ.எஸ்.) வாயிலாக பெவிலியன் சிலாங்கூர் எனும் காட்சிக் கூடத்தை நிறுவியிருந்தது. 'வீட்டுடமை, சொத்துடைமை, நீடித்த சுற்றுச்சூழல், கல்வி' என்ற கருப்பொருளை இந்த பெவிலியன் சிலாங்கூர் கொண்டிருந்தது.

சிலாங்கூர் மாநில அரசின் திட்டங்கள் தொடர்பான தகவல்களை காட்சிப்படுத்தியிருந்த இந்த பெவிலியன் சிலாங்கூருக்குப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம், மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, ஆட்சிக்குழு உறுப்பினர்களான பொர்ஹான் அமான் ஷா, நஜ்வான் ஹலிமி, அன்ஃபால் சாரி ஆகியோர் வருகை புரிந்தனர்.



# சிலாங்கூருக்கு வருகை புரிந்த சுற்றுப்பயணிகளில் பாதி பேர் ஐந்து நாடுகளைச் சேர்ந்தவர்கள்

**ஷா ஆலம்-**

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் 70 லட்சம் சுற்றுப் பயணிகளை வரவேற்பதற்கு ஏதுவாக சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க சிலாங்கூர் மாநில அரசு தயாராகி வருகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டில் இம்மாநிலம் 65 லட்சத்து 40 ஆயிரம் சுற்றுப்பயணிகளை ஈர்த்தது. அவர்களில் 44 லட்சத்து 10 ஆயிரம் பேர் வெளிநாட்டில் இருந்தும் எஞ்சியோர் வெளிநாடுகளிலிருந்தும் மாநிலத்திற்கு வருகை தந்தனர்.

தங்கிக் பொழுதைக் கழிக்கும் சுற்றுப்பயணிகள் என உலக சுற்றுலா நிறுவனம் வரையறுத்துள்ள நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளுக்கேற்ப டூரிசம் சிலாங்கூர் இந்த தரவுகளைச் சேகரித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2023ஆம் ஆண்டில் சுற்றுபயணிகள் எண்ணிக்கை 45.4 விழுக்காடு அதிகரித்துள்ளதை தரவுகள் காட்டுகின்றன. 50 லட்சம் சுற்றுப்பயணிகளை ஈர்க்கும் இலக்கை தாண்டி விட்டதை இது குறிக்கிறது.

பிரசித்தி பெற்ற சுற்றுலா மையம் என்ற சிலாங்கூரின் தோற்றத்தை இது உறுதிப்படுத்துவதோடு சூழியல் சுற்றுலா, தீம் பார்க் எனப்படும் நீர் பொழுதுபோக்கு பூங்காக்கள், உணவுச் சுற்றுலா, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைப் பிரபலப்படுத்தும் வியூகங்கள் தக்க பலனைத் தந்துள்ளதை காட்டுகிறது என டூரிசம் சிலாங்கூர் அறிக்கை ஒன்றில் கூறியது-

சீனா, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஜப்பான் மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் அதிகமாக சிலாங்கூருக்கு வருகை புரிந்த அனைத்துலகச் சுற்றுப்பயணிகளாக விளங்குகின்றனர். அனைத்துலகச் சுற்றுப்பயணிகள் எண்ணிக்கையில் இவர்கள் 46 விழுக்காடாக உள்ளனர்.

அதே சமயம், கோலாலம்பூர், ஜோகூர், பேராக், பகாங் மற்றும் பினாங்கைச் சேர்ந்தவர்கள் மாநிலத்திற்கு அதிகம் வருகை புரிந்த உள்நாட்டினராக விளங்குகின்றனர். உள்நாட்டு சுற்றுப்பயணிகள் பிரிவில் இவர்கள் 36 விழுக்காட்டை பிரதி நிதிக்கின்றனர்.

ஊராட்சி மன்றங்களைப் பொறுத்த வரை சுபாங் ஜெயா மாநகர் மன்றம் மிக அதிகமாக அதாவது 21 லட்சத்து 15 ஆயிரம் சுற்றுப்பயணிகளை ஈர்த்துள்ளது.

உலு சிலாங்கூர் நகராண்மைக் கழகப் பகுதிக்கு வருகைப் புரிந்த சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கை 358 விழுக்காடு அளவுக்கு மிக அபரிமித வளர்ச்சியைக் கண்டுள்ளது. அந்த ஊராட்சி மன்றப் பகுதிக்கு கடந்த 2022ஆம் ஆண்டு 16,920 சுற்றுப்பயணிகள் வருகை புரிந்த வேளையில் கடந்தாண்டு இந்த எண்ணிக்கை 7,521ஆக அதிகரித்தது.

பக்கம் 2 தொடர்ச்சி

# நவீன மின் சுடலைக்கான 25 ஆண்டு கால நகர்வு

## வெற்றியை நோக்கி– ஆலயம்

ஆம் நாட்டின் பல இடங்களில் இடுகாடு களையும், மின்சுடலைகளையும் நிர்வகித்து வரும் நிர்வாண நிறுவனம் மத்திய அரசின் சுற்றுலா துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ தியோங் மூலம் உதவி கரம் நீட்டியுள்ளது. அது இரண்டு அடுப்புகள் கொண்ட நவீன மின் சுடலையும் இறுதி மரியாதை செய்ய ஒரு சிறிய மண்டபமும் கொண்ட நவீன மின் சுடலை கட்டித் தர நிர்வாண நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

### எண்ணம் ஈடேற உதவிய அமைச்சர்

இதற்கு மத்திய அரசின் சுற்றுலா துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ தியோங் பெரும் பங்காற்றினார். அவரது அரிய முயற்சியால் இந்த நவீன மின் சுடலை கோல குபு பாரு சுற்று வட்டார மக்களுக்கு விரைவில் கிடைக்கவிருக்கிறது.



கோல குபு பாரு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தலைவர் பாலசந்திரன்

### சாதனையான ஆண்டு

ரவாங்கிற்கு அடுத்து நவீன மின் சுடலை கிடையாது. கோல குபு பாரு மக்கள் நவீன மின் சுடலை வேண்டி செரொண்டா அல்லது ரவாங்கிற்கு தான் சடலங்களை கொண்டு சென்று வந்தனர். இந்த சாலை வாகன நெரிசல் மிக்க ஒன்று, சாலை விபத்தும் அடிக்கடி ஏற்படும். இதனால் இறுதி மரியாதை செய்வதில் கூட கோல குபு பாரு மக்கள் பெரும் சவாலை எதிர் நோக்கி வந்தனர்.

கோல குபு பாரு, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத் தலைவர் பாலசந்திரன் அவர்கள் கடந்த 25 ஆண்டு கால போராட்டத்திற்கு இந்த இடைத் தேர்தலில் நல்ல தீர்வை மடாணி அரசின் ஒத்துழைப்போடு கொண்டு வந்தார்.
ஆலயத் தலைவரோடு கோல குபு பாரு வட்டார தொழிலதிபர் டத்தோ பி.எஸ்.சாமியும் இணைந்து கோல குபு பாரு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டனர்.

கடந்த 9ஆம் தேதி நிர்வாண நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஆலய முக்கிய பொறுப்பாளர்களுடன் வந்து கோல குபு பாரு இந்து சுடுகாட்டை பார்வையிட்டார். மின் சுடலை கட்டும் இடத்தையும் உறுதி செய்தார்.

2024 ஆம் ஆண்டு ஆலய நிர்வாகம் பெரும் சாதனை ஆண்டாக அமைந்துள்ளது. சமீபத்தில் 10 லட்சம் ரிங்கிட் செலவில் 5 வது மகா கும்ப அபிசேகத்தை வெற்றிகரமாக நடத்திய சில மாதங்களுக்கு பின் 25 ஆண்டுகால கனவாக இருந்த இந்த மின் சுடலைத் திட்டத்தை நிறைவேற்றுவது மேலும் ஒரு சாதனையாகும் என்றார் ஆலய செயலாளர் ஆனந்தா, ஆலய தலைவர் பாலசந்திரன் அவர்களின் சிறந்த தலைமைத்துவம் சிறந்த நிர்வாகமும் தான் இதற்கு முழுமுதற் காரணம் என்று தெரிவித்தார்.

இந்த நவீன மின் சுடலையை நிர்வாண நிறுவனம் அடுத்த பொதுத் தேர்தலுக்குள் கட்டி கொடுத்து விடும். அதன் பின் இந்த நவீன மின் சுடலையை கோல குபு பாரு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய நிர்வாகம் பராமரிக்கும் என்று அவர் கூறினார்.கோல குபு பாரு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தலைவர் பாலசந்திரன் அவர்கள்.

# கெ அடிலான் கட்சியின் மாநிலத் தலைவர்களாக

## இரு துணை அமைச்சர்கள் நியமனம்

**கோலாலம்பூர்-**
இங்கு நடைபெற்ற கெஅடிலான் கட்சியின் தலைமைத்துவ மன்றத்தின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மாநில தலைமைத்துவ மன்றத்தின் தலைவர்களான இரு துணையமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையின் கீழ் உயர்கல்வி துணையமைச்சர் டத்தோ முஸ்தாபா சக்முட் சபா மாநிலத் தலைவராகவும் உள்நாட்டு வர்த்தக மற்றும் வாழ்க்கைச் செலவின துணையமைச்சர் பவுஸியா சலோ பகாங் மாநிலத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக கெஅடிலான் கட்சியின் தகவல் பிரிவுத் தலைவர் ஃபாஹ்மி ஃபாட்சில் கூறினார்.

லெடாங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சைட் இப்ராஹிம் சைட் நோ ஜோகூர் மாநில கெஅடிலான் தலைவராகவும் பிரதமரின் அரசியல் செயலாளர் அஸ்மான் அபிடின் கூட்டரசுப் பிரதேச தலைவராகவும் ரோலாண்ட் எங்கான் சரவா மாநிலத் தலைவராகவும் அகமது நஸ்ரி முகமது யூசுப் திரங்கானு மாநிலத் தலைவராகவும் முகமது சுப்பாராடி முகமது நோர் கிளந்தான் மாநிலத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி சிலாங்கூர் மாநிலத் கெஅடிலான் தலைவர் பதவியையும் டத்தோஸ்ரீ அமிருடின் ஹருண் நெகிரி செம்பிலான் மாநிலத் தலைவர் பதவியையும் தக்க வைத்துக் கொண்டுள்ளனர் என்று ஃபாஹ்மி சொன்னார்.

இது தவிர கட்சியின் மத்திய தலைமைத்துவ மன்றத்திற்கு புதிதாக டத்தோ சங்க ராசாம், அஸான் இஸ்மாயில் மற்றும் டத்தோ ரோஸ்லான் ஹூசேன் ஆகிய மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

காஸா போர் மற்றும் அங்கு மேற்கொள்ளப்படும் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்தும் அந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு தலைமையேற்ற கட்சித் தலைவரும் பிரதமருமான டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தேசிய விவகாரங்கள், அரசாங்கக் கொள்கைகள் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விளக்களித்ததோடு மடாணி அரசாங்கத்தின் கொள்கைகளை நிறைவேற்றுவதில் கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, விரைவில் நடைபெறவிருக்கும் சுங்கை பாக்காப் இடைத் தேர்தலுக்கான கட்சி தேர்தல் இயந்திரத்தின் தயார் நிலை குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

# மத்திய அரசு மாநிலகளிடமிருந்து வசூலிக்கும் வரியில் ஒரு பகுதியை மாநிலங்களுக்கு தர வேண்டும்



**ஜார்ஜ் டவுன்-**
ஜூ லை மாதம் நடைபெறும் முதலமைச்சர்கள் மற்றும் மந்திரி புசார் கூட்டத்தில் மாநில களிடமி-ருந்து வசூலி-க்கப்படும் வரி-களில் குறிப்பிட்ட சதவீதத்தை மத்திய அரசு திருப்பித் தர வேண்டும் என்ற தனது ஆலோசனையைப் பற்றி விவாதிக்கவுள்ளதாக பினாங்கு முதல்வர் சௌ கோன் இயோவ் கூறுகிறார்.

இது குறித்து முதலில் மாநில எக்ஸ்கோ கூட்டத்தில் விவாதிக்கவும், அது அங்கீகரிக்கப் பட்டால், ஜூலை மாதம் நடைபெறும் முதலமைச்சர்கள் மற்றும் மந்திரி புசார் கூட்டத்தில் அதைக் கொண்டு வரவுள்ளதாக கூறினார்.

மலேசியாவிற்கு நிதிப் பரவலாக்கம் இல்லை, எனவே ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சேகரிக்கப்படும் வருவாயை மத்திய அரசு பகிர்ந்து கொள்வதற்கு மத்திய அரசமைப்புச் சட்டத்தில் எந்த விதிகளும் இல்லை என்றார் அவர்.

ஒவ்வொரு மாநிலத்துடனும் வருவாயைப் பகிர்ந்து கொள்வதற்கான கொள்கை மாற்றம் குறித்து பிரதமரால் முடிவெடுக்க முடியும் என்றும் இது பினாங்கு மட்டுமின்றி அனைத்து மாநிலங்களுக்கும் பயனளிக்கும் என்றும் சௌ கூறினார்.

"மத்திய அரசுடன் வருவாயைப் பகிர்ந்து கொள்வதில் ஒரு மாற்றத்தை நாங்கள் காண விரும்புகிறோம், டிரில்லியன் கணக்கான ரிங்கிட் மதிப்புள்ள முதலீடுகளைக் கொண்டு வரும் வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக பல்வேறு வரி விலக்குகளை மத்திய அரசு அமல்படுத்தியதால் நாங்கள் பாதிக்கப்படுகிறோம்," என்று அவர் கூறினார்.

"மத்திய அரசும் நிதி சவால்களை எதிர் கொள்கிறது, எனவே எனது பரிந்துரை தீவிரமாக பரிசீலிக்கப்படுமா அல்லது தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுமா என்பது எனக்குத் தெரியவில்லை," என்று அவர் மேலும் கூறினார்.

தேசிய நிதி கவுன்சில் கூட்டத்தில் தான் கலந்து கொண்டதாகவும், நாட்டிற்கு டிரில்லியன் கணக்கான கடன்கள் இருப்பதாகவும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 60 சதவீதம் என்றும் அவர் கூறினார்.

மாநிலத்தின் நிதி நிலையில், பினாங்கின் நிதி நிலைமை சீராக உள்ளது, அங்கு இந்த ஆண்டு ஏப்ரல் 30 வரையிலான RM235.19 மில்லியன் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் மொத்தம் RM258.72 மில்லியன் வருவாயைப் பதிவு செய்துள்ளதாக சௌ கூறினார்.

"எனவே, RM23.53 மில்லியன் உபரியாக உள்ளது," என்று அவர் கூறினார். எவ்வாறாயினும், கடந்த நவம்பரில் அங்கீகரிக்கப் பட்ட மாநில பட்ஜெட்டின் அடிப்படையில், மாநிலம் RM514.52 மில்லியன் பற்றாக்குறையை கணித்துள்ளது என்று அவர் கூறினார்.

மாநில செலவினங்களில் 60 சதவீதம் i-Sejahtera திட்டம், பொது போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கான திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை உள்ளடக்கியதால், மக்கள் நலனுக்கான மாநில அரசின் அர்ப்பணிப்பே பற்றாக்குறைக்கு காரணம் என்று அவர் கூறினார்.

# எரிபொருள் உதவி மானிய மறுஆய்வு - பிரதமரின் கடினமான ஆனால் தைரியமான நடவடிக்கை



**கோலாலம்பூர்-**
எரிபொருள் மானியங்களை மறு ஆய்வு செய்வதற்கான முயற்சி, கடினமானது ஆனால் துணிச்சலான நடவடிக்கையை பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் முன்னெடுத்துள்ளார், மேலும் முந்தைய தலைவர்கள்போலல்லாமல், ஜனரஞ்சகமாக இருக்க வேண்டும் என்ற ஆசையை மீறிய செயல் என்கிறார்கள் பல பொருளாதார வல்லுநர்கள்.

### நாட்டின் பொருளாதார - மக்கள் நல்வாழ்வுக்கு முன்னுரிமை

இவ்வாறு செய்வதன் மூலம், அவர் நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளித்துள்ளார், இதன் மூலம் டீசல் மானியத்தை மறு ஆய்வு செய்வதன் மூலம் ஆண்டுக்கு RM4 பில்லியன் சேமிப்பு கணிசமானது மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட க்கால திட்டமாக பார்க்கப்படுகிறது.

### தினசரி மில்லியன் கணக்கான ரிங்கிட் இழப்பு

ஆனால் மிக முக்கியமாக, டீசல் மானியத்தை மறுஆய்வு செய்வது பல தசாப்தங்களாக நீடித்து வரும் கடத்தலை கட்டுப்படுத்தும் முக்கிய செயல். இது நீண்ட காலமாக தினசரி மில்லியன் கணக்கான ரிங்கிட்டை நாடு இழக்கச் செய்துள்ளது.

இதில் நேசர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பிரதமரை விமர்சித்துள்ளனர், ஆனால் அண்டை நாடுகளுக்கு அப்பட்டமான டீசல் கடத்தலை தடுக்க யாராவது முன் வர வேண்டும். முந்தைய தலைவர்கள் எடுக்காத கடினமான மற்றும் தீர்க்கமான நடவடிக்கையை அன்வார் எடுத்துள்ளார்.

எரிபொருள் மானியங்களை பகுத்தாய்வு செய்வதில் முன்னைய தலைவர்களின் தயக்கம், கடத்தல் மூலம் தொடர்ந்து பில்லியன் கணக்கான ரிங்கிட் இழப்புக்கு வழிவகுத்தது.

டீசல் மானிய மறுஆய்வு அறிவிக்கும் போது அவர் கூறிய செய்தி தெளிவாக இருந்தது: அதாவது, அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், தொடர்ந்து டீசலுக்கு மானிய உதவி செலுத்துவது நிலையானது அல்ல.

### மக்களுக்கு உதவ வேண்டிய வளத்தை வீண்ணடிப்பதா?

மறுஆய்வை விமர்சிப்பவர்கள், மில்லியன் கணக்கான ரிங்கிட்களை இழந்ததன் விளைவாக தொடர்ச்சியான கடத்தல்களை கண்டுகொள்ளாமல் கண்மூடி இருந்தார்கள், நாமும் அப்படியே இருக்க வேண்டு மென எதிர்பார்க்கிறார்களா? இன்னும் எத்தனை காலம் இதனை கண்டும் காணாமல் இருக்க வேண்டும் என்ற கேள்வியை எழுப்புகிறது. மக்களுக்கு உதவ வேண்டிய நாட்டின் வளம் , டீசல் மானிய உதவியாக செலுத்தும் தொகை மனதை உலுக்குகிறது.

நிதி அமைச்சகத்தின் 2024 நிதிக் கண்ணோட்டத்தின் படி, மலேசியாவின் மொத்த உதவி மானியச் செலவு 2010 இல் RM14.2 பில்லியனில் இருந்து 2022 இல் RM70.3 பில்லியனாக உயர்ந்தது. எரிபொருள் மானியங்களுக்கான மிகப்பெரிய பில் RM 52 பில்லியன் அல்லது மொத்த மானியங்களில் 74 சதவீதம் ஆகும்.

சந்தேகத்திற்கு இடமின்றி, சிலர் அரசியல் ஆதாயத்திற்காக இந்த சிக்கலைப் பயன்படுத்திக் கொள்வார்கள், ஆனால் இதுபோன்ற மிகப்பெரிய மானியங்கள் தாங்க முடியாதவை மற்றும் சார்பு கலாச்சாரத்தை மட்டுமே உருவாக்கும் என்பதை அவர்களால் மறுக்க முடியாது.

மலேசியாவின் எல்லைகளில் நடக்கும் அனைத்து கடத்தல்களாலும், நமது மலிவான எரிபொருளைப் பயன்படுத்தி தெற்கே உள்ள நமது அண்டை நாடுகள் அதிக இலாபத்தை அடைகின்றன.

### கடன் RM1.5 டிரில்லியன் ஆனால் டீசலில் 70 பில்லியன் பாழ்

ஆனால், மானியப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட கடந்த கால செய்கையின் விளைவாக நாட்டின் கடன் மற்றும் பொறுப்புகள் RM1.5 டிரில்லியன் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 82 சதவீதத்தை எட்டியுள்ளது.

**ஹாங் லியோங் முதலீட்டு வங்கியின் கூற்றுப்படி, எரிபொருள் மானியங்களை அகற்றினால் எரிபொருள் விலைகள் RON95 க்கு 64 சதவீதமும், டீசலுக்கு 61 சதவீதம் அதிகரிக்க வேண்டும் - இருந்தும் கூட விலை புருனை தவிர ஆசியாவில் இன்னும் குறைவாகவே உள்ளது.**

பிரதமரின் தற்போதைய அறிவிப்பு முதலீட்டு வங்கி வருடாந்திர சேமிப்பு RM29 பில்லியனை மீட்கலாம் மற்றும் நிதிப் பற்றாக்குறையை GDPயில் (அரசாங்கத்தின் 2024 இலக்கு) 4.3 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதமாக குறைக்கலாம் என்று மதிப்பிட்டுள்ளது.

பணவீக்கத்தில், RON 95 மற்றும் டீசல் விலையில் ஒவ்வொரு 10 சதவீத அதிகரிப்பும் நுகர்வோர் விலைக் குறியீட்டை முழு ஆண்டு அடிப்படையில் 0.51 சதவீத புள்ளிகளால் உயர்த்தும் என்று மதிப்பிட்டுள்ளது.

தேசிய கருவூலத்தை மேம்படுத்தவும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தவும் டீசல் மானியங்களை மறுஆய்வு செய்ததற்காகவும், மடாணி அரசாங்கத்தின் சமீபத்திய அறிவிப்புக்குப் பிறகு விமர்சனங்கள் பெரும்பாலும் காலவரிசையில் கவனம் செலுத்துகின்றன, மறுஆய்வு நடைமுறைப் படுத்தப்படுமா அல்லது அரசாங்கம் பணப்பரிமாற்றத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறதா என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

2024 பட்ஜெட்டில் மானிய மறுஆய்வு முதன்முதலில் அறிவிக்கப்பட்டபோது அரசாங்கம் குறிப்பிட்ட தேதியை நிர்ணயிக்கவில்லை. ஆயினும்கூட, டீசல் எரிபொருளில் தொடங்கி தீபகற்ப மலேசியாவில் உள்ள பயனர்களை மட்டுமே உள்ளடக்கிய சீரமைப்பு இதற்கான முயற்சிகள் தொடங்கிவிட்டன.

### பஸ், டாக்ஸி லோரி நடத்துபவர்களுக்கு அரசு டீசல் உதவி மானியம் வழங்கும்

சரக்குகள் மற்றும் சேவைகளின் விலைகளில் கடுமையான அதிகரிப்புக்கு எதிராக மக்களைக் கட்டுப்படுத்த, 10 வகையான பொதுப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் 23 வகையான சரக்கு போக்குவரத்து வாகனங்களை உள்ளடக்கிய வணிக டீசல் மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தும் வர்த்தகர்களுக்கு டீசல் மானியங்களை அரசாங்கம் தொடர்ந்து வழங்கும்.

இதில் பொறிமுறை இறுதி செய்யப்படவில்லை என்றாலும், இலக்குக் குழுக்களுக்கான பணப் பரிமாற்றத்துடன் மானிய விலை எரிபொருளையும் இணைக்கலாம் என்று சமீபத்திய அறிவிப்பு தெரிவிக்கிறது.

மானிய உதவிப்பெறும் டீசல் விவகாரத்தை கூர்ந்து ஆராயும் போது, உழைப்பு செயலாக இருக்கும் போது, அதாவது பல அமைச்சகங்கள், ஏஜென்சிகள், துறைகள் மற்றும் மாநிலங்களை உள்ளடக்கியிருப்பதால், அதைச் செய்வது எளிதாக இருக்கும்.

உதாரணமாக, மீன்பிடி, போக்குவரத்து மற்றும் சிறு தொழில் போன்ற துறைகள் மூன்று வெவ்வேறு அமைச்சகங்களின் கீழ் வருகின்றன; அவர்களுக்குள், பல பிரிவுகள் உள்ளன.

எனவே, மானிய உதவி எரிபொருள் – பல தசாப்தங்களாக மலேசிய சமூகத்தில் மிகவும் வேரூன்றியுள்ளது – அதற்கு கட்டுப்பாடு விதிப்பது ஒரு நாணயத்தைப் புரட்டுவது போல் எளிதானது அல்ல.

### தேவைகளுக்கு உலக வளம் போதும் பேராசைக்கு இல்லை

வறுமை ஒழிப்பு, யாரும் பின் தங்கி விடக்கூடாது என்பதில் அரசாங்கம் படிப்படியாக முன்னேறி வருகிறது என்பது தெளிவாகிறது.

டீசல் மானியத்தை மறுஆய்வு, செய்வதும் அவசரமாக இல்லாமல் சரியான வழிமுறையை அமைத்து செயல்படுத்தினால் வெற்றிக்கிட்டும்.

வெளிப்படையாக, அனைத்து கொள்கை அமலாக்க நடவடிக்கைகளையும் போலவே, பிரச்சினையின் சிக்கலான தன்மை மற்றும் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் ஈடுபடும் காரணத்தால் பிரச்சினை கடுமையாக இருக்கும்.

கேள்வி என்னவென்றால், மானியத்தை மறுசீரமைப்பு செய்வது கடத்தல் மூலமான கசிவுகளை நிறுத்துமா? சரி, முழுமையாக இல்லையா என்பதே ?

அதே வேளையில் மானிய விலை எரிபொருளை, குறிப்பாக டீசலை கடத்துவதற்கான மாற்று வழிகளை, ருசி கண்டவர்கள், நேர்மையற்றவர்கள் தொடர்ந்து கண்டுபிடிப்பார்கள்.

மனிதனின் தேவைகளுக்கு உலகில் போதுமான அளவு வளம் இருக்கிறது, ஆனால் அவரது பேராசைக்கு இல்லை என்ற மகாத்மா காந்தியின் மேற்கோளைப் போலவே, முடிந்தவரை இதை கட்டுப்படுத்த பாடுபட வேண்டும்.



# மலேசியர்களுக்கு திவேட் பயிற்சிகளை வழங்க ஹாங்காங் ஆர்வம்

**ஹாங்காங்-**

இரு தரப்பு நன்மைக்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்திறன் (திவேட்) துறையிலும் பொருளாதாரத்திலும் ஒத்துழைப்பை நல்க மலேசியாவும் ஹாங்காங்கும் இணக்கம் கண்டுள்ளன.

இங்கு ஹாங்காங் சிறப்பு நிர்வாக பிராந்தியத்தின் நிர்வாகத் தலைவர் ஜோன் லீ கா சியூவுடன் நடத்திய சந்திப்பின் போது இந்த இணக்கம் காணப்பட்டதாக துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி கூறினார்.

துணைப் பிரதமராக கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பதவியேற்றப் பின்னர் சீனாவுக்கு அதிகாரப்பூர் வருகையை கிராம மற்றும் வட்டார மேம்பாட்டுத் துறை அமைச்சருமான அவர் மேற்கொண்டுள்ளார்.

சீன துணையதிபர் டிங் ஷிஹூஷியாங்கின் அழைப்பின் பேரில் அந்நாட்டிற்கு வருகை மேற்கொண்டுள்ள அவர், இம்மாதம் 22 முதல் ஜூன் 1 வரை அங்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்கு கொள்வார்.

ஹாங்காங்கில் பல பல திறன் தொழில் கல்வி நிலையங்களும் திவேட் பயிற்சி மையங்கள் மிகவும் வெற்றிகரமான முறையில் நடைபெற்று வருகின்றன. நம் நாட்டில் பயிற்றுனர்களுக்கு பயிற்சி அளிக்கவும் அவர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

தற்போது சுமார் 500 மாணவர்கள் ஹாங்காங்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயின்று வருகின்றனர். அவர்களில் 95 விழுக்காட்டினர் உபகாரச் சம்பளம் பெறும் மாணவர்களாவர்.

ஹாங்காங் சார்பில் மலேசியாவில் வர்த்தக மற்றும் பொருளாதார அலுவலகத்தை அமைப்பது மற்றும் பங்குச் சந்தையில் ஹாங்காங் சிறப்பு நிர்வாக பிரிவின் நிதி நிர்வாகிகளின் பங்கேற்பை அதிகரிப்பது குறித்தும் தாங்கள் விவாதித்ததாக அவர் சொன்னார்.

# மலேசியா-சீனா உறவை வளர்க்க அரசாங்கம் கடப்பாடு கொண்டுள்ளது

**கோலாலம்பூர்-**

அரச தந்திர உறவுகளின் 50வது ஆண்டு விழாவை இன்று கொண்டாடும் மலேசியா மற்றும் சீனா இடையே உறவை தொடர்ந்து வளர்க்கும் கடப்பாட்டை மடாணி அரசு கொண்டுள்ளது.

தூதரக உறவுகளை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை இட்டதன் மூலம் மலேசியாவும் சீனாவும் ஆசிய புவிசார் அரசியலின் வடிவமைப்பை கடந்த 1974ஆம் ஆண்டு மே 31ஆம் தேதி மறுவடிவமைத்தன என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

பிரிவை இணைக்கும் தென்கிழக்காசியாவின் முதல் சோசலிசம் அல்லாத நாடாக மலேசியா விளங்கியது.

இந்த உறவைத் தவிர்ப்பதற்கான வெளிப்படையான காரணங்கள் இருந்த போதிலும் சித்தாந்த இடைவெளி, சமரசம் செய்ய முடியாத வேறுபாடுகளுக்கு மத்தியில் எங்கள் தலைவர்கள் மரபுகளைத் தாண்டி சிந்திக்கத் துணிந்தனர். இந்த துணிச்சலான நடவடிக்கை ஆக்ககரமான மற்றும் பயனுள்ள கூட்டணியாக மலர்ந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

மக்கள் மற்றும் முழு பிராந்தியத்தின் செழிப்பான வளர்ச்சிக்காக இந்த முக்கிய உறவை வளர்ப்பதில் மடாணி அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்று அவர் முகநூல் பதிவில் கூறினார்.

இந்த வரலாற்று மைல் கல் உறவைக் கொண்டாட சீனப் பிரதமர் லீ கியாங்கின் அதிகாரப்பூர்வ மலேசியப் பயணத்தை தாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக அன்வார் குறிப்பிட்டார்.




# சேம நிதி வாரிய கணக்கில் இருந்து நெகிழ்வான கணக்கிற்கு மாற்ற கோரிக்கை

**கோலாலம்பூர்-**

ஊழியர் சேமநிதி வாரியம் (EPF) மே 22 ஆம் தேதி வரை மொத்தம் 2.86 மில்லியன் ஆரம்ப இடமாற்ற விண்ணப்பங்கள் பெறப்பட்டு செஜாத்ரா கணக்குகளில் இருந்து 8.78 பில்லியன் ரிங்கிட் உள்ள நெகிழ்வான கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

கார்ப்பரேட் விவகார துறையின் EPF மீடியா டெஸ்க் படி, மே 12 அன்று உறுப்பினர்களுக்கு விருப்பம் திறக்கப்பட்டது.

இதற்கிடையில், மொத்தம் 3.04 மில்லியன் நெகிழ்வான கணக்கு திரும்பப் பெறுதல் விண்ணப்பங்கள் மொத்தம் RM5.52 பில்லியனை உள்ளடக்கியது.

EPF தலைமை இயக்க அதிகாரி சசாலிசா ஜைனுடின் கூறுகையில், 31 ஆகஸ்ட் 2024 இறுதித் தேதி வரை தங்கள் செஜாத்ரா கணக்கிலிருந்து ஃப்ளெக்சிபிள் கணக்கிற்கு ஆரம்பத் தொகையை மாற்றுவதற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என EPF எதிர்பார்க்கிறது.

"KWSP i-Akaun மொபைல் அப்ளிகேஷன் மூலம் பயன்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களின் டிஜிட்டல் சலுகைகளை நாங்கள் தொடர்ந்து புதுமைப்படுத்தி விரிவுபடுத்தும் போது, பயனர் அனுபவத்தையும் அணுகலையும் மேம்படுத்துவதற்கான எங்களது முயற்சிகளை இது பிரதிபலிக்கிறது," என்று அவர் கூறினார்.

12 மே முதல் ஆகஸ்ட் 31, 2024 வரை, உறுப்பினர்களின் சேமிப்புத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை செஜாத்ரா கணக்கிலிருந்து நெகிழ்வான கணக்கிற்கு மாற்றுவதற்கான விருப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

ஃப்ளெக்சிபிள் அக்கவுண்ட்டிற்கு ஆரம்பத் தொகை பரிமாற்றமானது, விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியில் உள்ள உறுப்பினரின் செஜாத்ரா கணக்கில் உள்ள இருப்புக்கு உட்பட்டது.

ஃப்ளெக்சிபிள் அக்கவுண்ட்டில் இருந்து எந்த நேரத்திலும் எந்த நோக்கத்திற்காகவும் குறைந்தபட்சம் RM50 திரும்பப் பெறலாம்.

செஜாத்ரா கணக்கில் உள்ள சேமிப்பின் ஒரு பகுதியை நெகிழ்வான கணக்கிற்கு மாற்றுவதற்கான விருப்பத்தின் இறுதித் தேதி ஆகஸ்ட் 31, 2024 என்பதால், அவசர அவசரமாக மாற்ற வேண்டாம் என உறுப்பினர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

EPF i-Akaun இல் இதுவரை பதிவு செய்யாத உறுப்பினர்கள், நெகிழ்வான கணக்கிலிருந்து திரும்பப் பெறும் பரிவர்த்தனைகளை செயல்படுத்துவதற்கு அவ்வாறு செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

EPF கணக்கு மறுசீரமைப்பு மற்றும் ஆரம்பத் தொகை பரிமாற்ற விருப்பம் தொடர்பான விவரங்களுக்கு, உறுப்பினர்கள் www.kwsp.gov.my இல் உள்ள EPF இணையதளத்தைப் பார்க்கவும் அல்லது 03-8922 6000 என்ற எண்ணில் EPF உறவு மேலாண்மை மையத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof
**Aras 11, Menara Bank**
**Rakat, No1 Jalan Indah**
**14/8, Seksyen**
**14, 4000 Shah Alam.**
*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*



# சுக்மா போட்டி : சிலாங்கூர் அணி தீவிரப் பயிற்சி

**ஷா ஆலம்-**
அடுத்த மாதம் சரவாக்கில் நடைபெறவுள்ள 21வது மலேசிய விளையாட்டுப் போட்டிகளை (சுக்மா) எதிர்கொள்ள சிலாங்கூர் அணி 85 விழுக்காடு தயாராக உள்ளது.

மாநில அணி பயிற்சிகளையும் முயற்சிகளையும் தீவிரமாக்கியுள்ள அதே வேளையில் தகுதியான விளையாட்டு வீரர்களின் பட்டியலை இறுதி செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது என்று விளையாட்டுத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் நஜ்வான் ஹலிமி கூறினார்.

நாங்கள் தயார் நிலையில் இருக்கிறோம். இப்போது தயார் நிலை 85 விழுக்காடாக உள்ளது. நாங்கள் சரவாக் மாநிலத்திற்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளையும் பார்வையிட்டோம் என்று அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில் நாங்கள் விளையாட்டு வீரர்களின் பட்டியலை இறுதி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம். முதல் மூன்று இடங்களில் ஒன்றைப் பெறும் இலக்குடன் கூடுதல் பயிற்சிகளுடன் எங்கள் முயற்சிகளையும் இரட்டிப்பாக்கியுள்ளோம் என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.

இங்குள்ள பண்டார் நுசா ரூவில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கிய பின்னர் நஜ்வான் இதனைச் சொன்னார்.

21வது சுக்மா சாம்பியன்ஷிப் போட்டி எதிர்வரும் ஆகஸ்டு மாதம் 17 முதல் 24 வரை சரவாக்கில் நடைபெறவுள்ளது.

சரவாக்கில் நடைபெறும் சுக்மா போட்டியில் இடம் பெறும் 37 வகையான விளையாட்டுகளில் சிலாங்கூரைச் சேர்ந்த மொத்தம் 1,138 விளையாட்டு வீரர்கள் பங்கேற்பர் என்று என்று கடந்த மார்ச் மாதம் சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தில் நஜ்வான் அறிவித்தார்.

# சுக்மா, பாரா சுக்மாவிற்கு மத்திய அரசு RM50 மில்லியன் வழங்கவுள்ளது

**கூச்சிங்-**
2024 மலேசியா விளையாட்டுப் போட்டிகள் (சுக்மா) மற்றும் பாரா சுக்மாவை நடத்துவதற்காக சரவாக்கிற்கு 50 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

அதன் இளைஞர், விளையாட்டு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் டத்தோஸ்ரீ அப்துல் கரீம் ரஹ்மான் ஹம்சா, இந்த தொகையானது சரவாகின் கோரிக்கையான ரிங்கிட் 100 மில்லியனைக் காட்டிலும் குறைவாக இருந்தாலும், சரவாக் தொடர்ந்து எதிர்பார்த்து நல்ல பங்களிப்பாளராக இருக்கும் என்று கூறினார்.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது சரவாக்கின் நிதி வளம் நன்றாக இருப்பதால் நாங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளோம். நாங்கள் பிரச்சினையைப் பற்றி புகார் செய்யவில்லை, ஏனென்றால் நாள் முடிவில், முக்கியமானது என்னவென்றால், நாம் ஒரு நல்ல ஏற்பாட்டாளராக விளையாட்டுகளை ஊக்குவிக்க முடியும் என்பதை காட்ட வேண்டும்.

"சுக்மாவை இங்கு நடத்துவது, எங்களுக்கு பயனளிக்கும் முக்கியமாக, நிகழ்வின் போது ஒரு நபர் RM1,000 செலவழித்தால் உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அனைத்து தொழில்களுக்கும் ஊக்கம் பெறும் (மற்றும் பொருளாதாரம்) நன்மை மிகப்பெரியதாக இருக்கும், "என்று அவர் இன்று செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார்.

மே 14 அன்று, கரீம் 24 விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப் படுவதற்கு அடையாளம் காணப்பட்டதாகவும், சுக்மா 2024 க்கு முன்னதாக மூன்று புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாகவும், மொத்த செலவு RM200 மில்லியன் ஆகும்.

சரவாக் கிரிக்கெட் மற்றும் ரக்பி மைதானம், சரவாக் வுஷு பயிற்சி மற்றும் போட்டி மையம் மற்றும் பெட்ரா ஜெயாவில் உள்ள சரவாக் விளையாட்டு கிராமம் ஆகிய மூன்று புதிய வசதிகள் உள்ளன.

சுக்மா 2024 ஆகஸ்ட் 17 முதல் ஆகஸ்ட் 24 வரை நடைபெறும், இதில் கூச்சிங், சமரஹான், செரியன், ஸ்ரீ அமான், பெத்தோங், சிபு, முக்கா, பிந்துலூ மற்றும் மீரி ஆகிய பிரிவுகள் அடங்கும்.

236 ஆண்களுக்கான போட்டிகள், 217 பெண்களுக்கான போட்டிகள் மற்றும் 37 விளையாட்டுகளில் 35 கலப்பு போட்டிகள் என மொத்தம் 488 போட்டிகள் நடத்தப்படும்.

இது 9,927 விளையாட்டு வீரர்கள் மற்றும் 2,692 அதிகாரிகளை உள்ளடக்கிய பல்வேறு குழுக்களில் இருந்து 12,619 பேரை சேகரிக்கும்.

1986 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சுக்மா, 1990 மற்றும் 2016 இல் இரண்டு முறை சரவாக்கில் அரங்கேற்றப்பட்டது.

# SAM 100PLUS விருது – முன்னணியில் இருப்பவர்களில் சிவசங்கரி

**கோலாலம்பூர்-**
மலேசியாவின் விளையாட்டு எழுத்தாளர்கள் சங்கம் SAM 100PLUS 2023 ஆம் ஆண்டின் சிறந்த தடகள விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட ஆறு தடகள வீரர்களில் தேசிய ஸ்குவாஷ் ஏஸ் மற்றும் 2022 ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற எஸ்.சிவசங்கரியும் ஒருவர்.

இங் யென் யாவ் Ng Eain Yow (ஆண்கள் ஸ்குவாஷ்), வுஷு வெற்றியாளர் வோங் வெங் சூன், உலக டென்பின் பந்துவீச்சு சாம்பியன் நடாஷா மொஹமட் ரோஸ்லான் மற்றும் பெண்கள் புல்வெளி பந்துவீச்சு ஜோடி நூர் அய்ன் நபிலா Nur Ain Nabilah Tarmizi மற்றும் அலினா அஹ்மாட் நவாவி ஆகியோர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றவர்கள்.

நாட்டின் விருதுகள் மேடையை வழக்கமாக அலங்கரித்த இரண்டு தேசிய பாரா-தடகள வீரர்கள், பவர்லிஃப்டிங்கிலிருந்து போனி புன்யாவ் கஸ்டின் மற்றும் பேட்மிண்டன் சிச்யா லிக் ஹாவ் , 2023 ஆம் ஆண்டின் சிறந்த பாரா விளையாட்டு வீரருக்கான போட்டியில் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

SAM 100PLUS விருதுகள் 2023 இன் தலைவர் ஹஸ்ரீன் முபாரக், 2023 ஆம் ஆண்டுக்கான விருதுகள் பட்டியலில் பல புதிய முகங்களை உள்ளடக்கும் என்று கூறினார், மலேசியா அதன் தரவரிசையில் பல மெருகூட்டப்படாத வைரங்களைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

"நாட்டில் உள்ள விளையாட்டு ஊடகவியலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் SAM, SAM-100PLUS விருதுகளில் இரண்டு பிரிவுகளின் மூலம் வழங்கப்படும் அங்கீகாரம் மற்றும் பாராட்டுக்கள், 'டெமி மலேசியா' முழக்கத்தை பின்பற்றுவதற்கு பிராந்திய மற்றும் உலகளாவிய நிலைகளில் தங்கள் திறமைகளை தொடர்ந்து நிரூபிக்க இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் என்று நம்புவதாக அவர் சொன்னார்.

SAM 100PLUS விருதுகள் 2023, ஜூன் 6 ஆம் தேதி ஸ்ரீ பசிபிக் ஹோட்டலில் திட்டமிடப்பட்டுள்ளது, மொத்தப் பரிசுத் தொகையாக RM50,000 வழங்கும் விருதுகளை வழங்கி விளையாட்டு எழுத்தாளர்களை கௌரவிக்கிறது.

விளையாட்டு எழுத்தாளர்கள் பிரிவில் சிறந்த ஒட்டுமொத்த வெற்றியாளர் கோப்பை மற்றும் RM7,000 ரொக்கத்தை உள்ளடக்கிய சீபல் விருதைப் பெறுவார்.

# சாம்சன் 400 மீட்டர் ஓட்டத்தில் சாதனை




**கோலாலம்பூர்-**
அமெரிக்காவின் டென்னசியில் நடைபெற்ற மியூசிக் சிட்டி டிராக் கார்னிவல் சாம்பியன்ஷிப் போட்டியில் தேசிய மகளிர் தடகள வீராங்கனை ஷெரீன் சாம்சன் வல்லபோய் 400 மீட்டர் ஓட்டத்தில் தேசிய சாதனையை முறியடித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

மர்ஃப்ரீஸ்போரோவில் உள்ள டீன் ஏ. ஹேய்ஸ் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஷெரீன் பந்தயத்தை 51.79 வினாடிகளில் கடந்து இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

பேராக் மாநிலத்தை சேர்ந்த தடகள வீராங்கனை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்த 63 வது "Mt SAC Relays" வருடாந்திர தடகள சாம்பியன்ஷிப்பில் தான் ஏற்படுத்திய 51.80 வினாடி என்ற சாதனையை வெற்றிகரமாக முறியடித்தார்.

ஜமைக்கா வீராங்கனை லியா ஆண்டர்சன் 51.67 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து தங்கப் பதக்கத்தையும் மற்றும் சொந்த நாட்டு வீராங்கனை நாஷா ரொய்ன்சன் வெண்கலப் பதக்கத்தை (51.82 வினாடிகள்) வென்றார்.

மேலும், 26 வயதான தடகள வீராங்கனை நேற்று தனது சாதனையை முறியடித்த போதிலும், ஜூலை மாதம் நடைபெற உள்ள பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற வேண்டுமானால் அவர் இன்னும் குறைந்தது 50.95 வினாடிகளுக்குள் பந்தைய தூரத்தைக் கடக்க வேண்டும்.



# பொது ஒழுங்கை சீர்குலைக்கும் தரப்பினருக்கு எதிராக கடும் நடவடிக்கை

**கோலாலம்பூர்-**

நாட்டில் அண்மைய காலமாக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் தீவிரவாதிகள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் எச்சரித்துள்ளார்.

மலேசியாவின் அமைதியையும் அதன் செழிப்பான பொருளாதாரத்தையும் சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் சொன்னார்.

சமீபத்திய வாரங்களில் பாதுகாப்புப் பணியாளர்களின் உயிரைப் பறித்த பல வன்முறைச் சம்பவங்கள், தீவிரவாதக் கும்பல்கள் மற்றும் குழப்பத்தை தூண்டி விடுவோரின் நடவடிக்கைகளால் நமது தேசம் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்த கும்பல்களுக்கு எதிராக நாங்கள் உறுதியான நடவடிக்கை எடுப்போம் என்பதை பாதுகாப்புப் படையினருடனான சந்திப்புக்குப் பிறகு நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இறைவன் அருளால் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டு அமைதியான சூழல் நிலவும் என்றும் அவர் நேற்றிரவு நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய நேரடி உரையில் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மே 17ஆம் தேதி ஜோகூர் பாருவில் உள்ள உலு திராம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த இரண்டு போலீசார் முகமூடி அணிந்த நபரின் தாக்குதலில் பலியான தோடு மற்றொரு போலீஸ்காரர் காயமடைந்தார்.

அதே நாளில் தலை நகரில் நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தில் இஸ்தானா நெகாராவிற்குள் அத்துமீறி நுழைய முயன்ற இரண்டு உள்ளூர் ஆடவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களின் வாகனத்தில் ஒரு கத்தி கண்டுபிடிக்கப்பட்டது.

அடுத்ததாக, இம்மாதம் 18ஆம் தேதி சீ பூத்தே நாடாளுமன்ற உறுப்பினர் தெரசா கோக்கின் வீட்டிற்கு இரண்டு தோட்டாக்கள் அடங்கிய மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும் மே 19ஆம் தேதி பினாங்கில் உள்ள டத்தோ கிராமாட் காவல் நிலையத்தில் அத்துமீறி நுழைந்து ஒரு போலீஸ்காரரின் துப்பாக்கியைக் கைப்பற்ற முயன்றதாக சந்தேகிக்கப்படும் 35 வயதான உள்ளூர் நபர் கைது செய்யப்பட்டார்.

# இந்திய தொழில்முனைவோருக்கான ரக்யாட் வங்கியின் உதவித் திட்டம்



**கோலாலம்பூர்-**

இந்திய தொழில்முனைவோருக்கான பேங் ரக்யாட்டின் நிதியுதவித் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (PMKS) நடத்தும் இந்திய தொழில் முனைவோருக்கு மூலதனத்தை வழங்குவதற்காக RM50 மில்லியனை அந்நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், ஒட்டுமொத்த மலேசிய சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்காக 70 ஆண்டுகள் இயங்கி வரும் ரக்யாட் வங்கியின் அர்ப்பணிப்புக்கு இந்த திட்டம் ஒரு சான்றாகும் என்று தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு மேம் பாட்டுத் துறை துணை அமைச்சர் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் கூறினார்.

மேலும், இந்திய சமூகத்திடையே தீவிர வறுமையை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் விருப்பத்தை அடைய இது ஒரு வாய்ப்பாகும். இதனால் செழிப்பான மற்றும் நாகரிகம் நிறைந்த மலேசியாவில் பொருளாதார இடைவெளியைக் குறைக்க முடியும்.

"அதுமட்டுமில்லாமல், இது இந்திய சமூக தொழில்முனைவோருக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய ஒரு திட்டமாகும்.

"இந்திய சமூகத்தின் தொழில்முனைவோரை ஆதரிப்பதன் மூலம், அனைவருக்குமான மிகவும் மாறுபட்ட, நெகிழ்ச்சியான மற்றும் வளமான பொருளாதாரத்தை வளர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

" சந்தையில் உள்ள மற்ற நிதியளிப்பு திட்டங்களுடன் ஒப்பிடும்போது இத்திட்டம் பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. அவற்றில் குறு நிறுவனங்களுக்கு RM1000 முதல் RM50000 வரையிலான நிதி வரம்புடன் ஆண்டுக்கு 6.50 சதவீதம் வட்டியில் வழங்கப்படுகிறது.

வருடத்திற்கு அடிப்படை நிதி விகிதம் (KAP) +0.67 சதவிகிதம் ஆகும். இதில் உத்தரவாதக் கட்டணம் RM50001 முதல் RM1 மில்லியன் வரை இருக்கும்.

விண்ணப்ப ஒப்புதல் செயல்முறைக்கு 14 வேலை நாட்கள் மட்டுமே ஆகும் என்று அவர் கூறினார்.

# 2024 தேசிய திவேட் தினத்தில் வேலை வாய்ப்பு

**பந்திங்-**

இவ்வாண்டிற்கான தேசிய திவேட் தினம் கோல லங்காட், தொழிலியல் பயிற்சிக் கழகத்தில் நாளை தொடங்கி இரு தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொழில்நுட்ப மற்றும் தொழில்திறன் (திவேட்) தொடர்பான கல்வி மற்றும் பயிற்சிகள், கண்காட்சி மற்றும் இதர நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திவேட் கல்விக் கழகங்களின் தொழில்நுட்ப படைப்புகள், மின்சார வாகனம், வான் போக்குவரத்து தொடர்பான படைப்புகள் மற்றும் கண்காட்சிகளும் 3,000 பேர் வேலை பெறுவதற்குரிய வேலை வாய்ப்புச் சந்தையும் சிறப்பு அங்கங்களாக இடம் பெறும் என்று தேசிய திவேட் மன்றச் செயலகத்தின் தலைவர் டாக்டர் முகமது ஃபைசால் தோக்கேரான் கூறினார்.

இந்த தேசிய தினத்தில் சுமார் 15,000 பேர் வரை கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதாகக் கூறிய அவர், இந்த நிகழ்வு திவேட் கண்காட்சி, திவேட் கருத்தரங்கு, திவேட் வேலை வாய்ப்புச் சந்தை, திவேட் தொழில் முனைவோர் மற்றும் திவேட் சவால் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்றார்.

இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளின் வாயிலாக திவேட் துறை தொடர்பான பல்வேறு தகவல்களைப் பொது மக்கள் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்பதோடு இளையோர் தங்கள் எதிர்காலக் கல்வியை முடிவு செய்வதற்கு ஏதுவாக திவேட் கல்வியை முடித்தவர்களுக்கு உள்ள வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் வாய்ப்பு கிட்டும் என்று அவர் தெரிவித்தார்.



இந்த நிகழ்வின் சிறப்பு அங்கம் என்னவென்றால் திவேட் திட்டத்தை அமல்படுத்தும் 12 அமைச்சுகளும் இதில் பங்கேற்கின்றன. ஆகவே, மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் பங்கேற்று பயன் பெறுவதற்குரிய வாய்ப்பினை நழுவ விட வேண்டாம் என பொது மக்களை கேட்டுக் கொள்கிறோம் என்றார் அவர்.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor